அறிவுச் சுடர்

(ஒளி-2)

பா. பக்கிரிசுவாமி செட்டியார்,

தமிழாசிரியர்,

தொண்டைமண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை,

சென்னை.

மாணவர் பிரசுராலயம்,

297, தங்கசாலை வீதி,

சென்னை.

பதிப்புரிமை] 1933 [விலை அணா 5

T. L. Press, Madras

முன்னுரை

கதைகள் கேட்பதில் சிறுவர்களுக்கு மிகவும் விருப்பமுண்டு. அக் கதைகள் வழியாக நீதிகளைப் போதித்தால் இளமையிலேயே சிறந்த கருத்துக்கள் அவர்கள் மனதில் சிலையில் எழுத்தைப்போல் பதியு மென்பதில் ஐயமில்லை.

இந்த நன்னோக்கங் கொண்டே 'அறிவுச் சுடர்' என்ற இந்த நூல் என்னால் ஆக்கப்பட்டுள்ளது. இதில் இளைஞர்க்கு இன்பமளித்து, அவர்கள் உள்ளத்தில் நல்லொழுக்கத்தை விதைக்கத் தக்க அரிய கதைகள் சில அடங்கி இருக்கின்றன. இப் புத்தகத்தில் நம் நாட்டுக் கதைகளே அன்றி வெளி நாட்டுக் கதைகளும் உண்டு; சில பெரியார்களின் உண்மைச் சரித்திரங்களும் இருக்கின்றன.

இக் கதைகளைக் கற்றுணரும் சிறுவர் சிறுமியர், கடவுள் பக்தி, சகோதர வாஞ்சை, தரும சிந்தை, சேவையில் ஆர்வம், நன்றி மறவாமை, உரிமை வேட்கை, மொழிப் பற்று, சலியா முயற்சி முதலிய சிறந்த குணங்கள் பொருந்தப் பெற்று, தமிழ் மணிகளாய்த் திகழ்வரென்பது திண்ணம்.

'அறிவுச் சுடர்' என்ற இந் நூலைப் பாலர்கள் படித்து அறிவுச் சுடர் கொளுத்தப் பெறுவாராயின் அதுவே யான் விரும்பும் கைம்மாறாகும்.

பா. பக்கிரிசுவாமி

உள்ளுறை

பாடம்	பொருள்		பக்கம்
1.	இறைவன் இல்லாத இடமில்லை		1
2.	சகோதர வாஞ்சை		4
3.	பச்சையப்ப முதலியார்	(படம்)	8
4.	அறிவு ஆக்கந்தரும்	(படம்)	15
5.	உயிர் துறந்த தியாகி		21
6.	கடமையின் வெற்றி	(படம்)	28
7.	சிங்கத்தின் நன்றி	(படங்கள்)	34
8.	சமிக்ஞை சாஸ்திரி		40
9.	வெற்றி வீரன் வில்லியம் டெல்	(படம்)	45
10.	சுவித்ஸர்லாந்தின் சுதந்தர வீரன்		55
11.	வேள்-பாரி		60
12.	ஒரு சிறுமியின் பாஷாபிமானம்		63
13.	ஸர். தி. முத்துசாமி ஐயர்	(படம்)	68
14.	பட்டினத்தடிகள்	(படம்)	77



பட்டினத்தடிகள்

(77-ஆம் பக்கம் பார்க்க.)

அறிவுச் சுடர்

இறைவன் இல்லாத இடமில்லை

இந்தியாவின் வடமேற்கில் ஐந்து நதிகள் பாயும் பிரதேசம் ஒன்று உண்டு. அப் பிரதேசத்திற்குப் பஞ்சாநதம் என்று பெயர். அங்கே வசிக்கின்ற மக்களில் அனேகர் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர். சீக்கியரின் குருமார்கள் பத்துப்பேர். நாநகர் என்பவர் அந்தக் குருமார்களில் முதல்வராவர். அவர் சிறந்த அறிவாளி; நிறைந்த குணசாலி; ஆண்டவனிடத்தில் நீங்காத அன்பு வாய்ந்தவர்; தெய்வம் ஒன்றே என்ற உயரிய கொள்கை உடையவர்; எம்மதமும் சம்மதம் என்ற சமரச நோக்கம் கொண்டவர்.

மக்கமா நகரம் என்பது முஸ்லிம்களின் புண்ணிய ஸ்தலம். அந்த நகரம் அரபியா தேசத்தில் உள்ளது. அந்த க்ஷேத்திரத்தில்

ஆண்டவன் அல்லா அமர்ந்து அருளி யுள்ளார்.

நாநகர் அல்லாவைச் சேவிக்க மக்கமா நகரம் அடைந்தார்; எல்லாம் வல்ல அல்லாவை வணங்கி, ஒரு நாள் இரவு சந்நிதியிலே படுத்து நித்திரை செய்தார். அங்கே இருந்த சேவகன் அதைக் கண்டு கோபங் கொண்டான்; உடனே அருகில் சென்று 'கடவுள் சந்நிதிக்கு முன்னே காலை நீட்டிக் கொண்டு தூங்குகின்ற நீர் யார்? இது உமக்கு ஏற்குமா?' என்று அதட்டிக் கேட்டான்.

உறக்கம் நீங்கிய நாநகர் 'அப்பா! அல்லாவைக் காண அனேக காத தூரம் கால் கடுக்க நடந்து வந்தேன். அக் காலின் நோவை ஆண்டவனிடம் காட்டாமல் வேறு யாரிடம் காட்டுவேன்' என்று உரைத்தார். பெரியாரின் தன்மை அறியாத பேதையாகிய அச் சேவகன், நாநகரின் கால்களைப் பிடித்து வலிக்க இழுத்து வேறு பக்கத்தில் இட்டான். உடனே அவன் பெரியாரது பாதம் கிடந்த பக்கத்தில் இறைவன் சந்நிதி இருக்கக் கண்டான்; ஆச்சரியங் கொண்டான்.

எனினும் அவன் மீண்டும் பெரியார் பாதத்தைப் பற்றி இழுத்து மற்றொரு பக்கத்தில் போட்டான்; அப்பொழுதே ஆண்டவன் சந்நிதியை அப் பக்கத்திலும் பார்த்தான். சேவகனை அச்சமும், நடுக்கமும் வாட்டின. அவன் பெரியார் நாநகரின் பாதத்தில் விழுந்து பணிந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.

உடனே நாநகர் அவனைத் தேற்றி 'அன்பனே! இறைவன் இல்லாத இடம் எங்கும் இல்லை என்பதை இன்று முதல் நன்கு அறிந்து கொள்' என்றார். பின்னர், அச் சேவகன் பெரியாரை நோக்கி 'ஐயா! தாங்கள் இந்துவா? முஸ்லிமா?' என்று கேட்டான். அது கேட்ட குருநாதர் 'சோதர! யானோ தெய்வம் ஒன்றே என்ற நம்பிக்கை யுடையவன். ஆதலால் எனக்கு எம் மதமும் சம்மதமாகும். எந்த உயிரையும் நம் உயிர் போல் எண்ணுவதே உயர்ந்த மதம். அவ்வாறு எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டினால் இறைவன் நம்மிடம் இரக்கம் காட்டுவார்' என்று உரைத்தார்.

பெரியாரது பொன் மொழிகளைக் கேட்டது முதல் அச் சேவகன் பெரிதும் திருந்தினான். 'அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசம்.'

---

2. சகோதர வாஞ்சை

பழங் காலத்தில் ஆண் பெண்களை அடிமைகளாய் விற்று விடும் பழக்கம் இருந்தது. அடிமைகளாய் விற்கப் பட்ட மக்களை விலைக்கு வாங்கிய எஜமானர்கள் ஆடு மாடுகளைப்போல் மிகக் கேவலமாய் நடத்துவார்கள். அடிமைகள் தங்கள் தலைவர்களால் இடப்படும் வேலைகளைத் தப்பாமல் செய்யவேண்டும்; இல்லையேல் கொடிய தண்டனைக்கு உள்ளாக நேரிடும். அடிமைகள் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அதிகமாக உழைத்துப் பொருள் தேடி எஜமானர்களிடம் கொடுத்தால், நாளடைவில் விடுதலை அடையலாம்.

ஒரு சமயம் ஒரு பிரபு இரண்டு அடிமைகளை விலைக்கு வாங்கினார். அந்த அடிமைகள் இருவரும் சகோதரர்களாவர். அவர்

களில் மூத்தவன் கஷ்டப்பட்டு வேலை செய்ய முடியாதவன்; அவனைச் சோம்பேறி என்றே சொல்லலாம். பாடுபட்டுப் பணந் தேடினாலன்றோ விடுதலை அடையலாம்! ஆனால் இளையவனோ சுறுசுறுப்பாய்க் கஷ்டப்பட்டு உழைக்கக் கூடியவன்; ஊக்கமும் விடா முயற்சியு முடையவன்.

இளைய சகோதரன் ஒழிந்த வேளைகளிலெல்லாம் கஷ்டப்பட்டு அதிகமாய் வேலை செய்தான்; அதன் பயனாக அவனுக்குத் தன்னை அடிமை பந்தத்தினின்றும் விடுவித்துக் கொள்ளப் போதிய பொருள் கிடைத்தது.

பின்பு ஒரு நாள் அந்த அடிமை தன் தலைவரை அடைந்தான்; தான் சேர்த்து வைத்திருந்த தொகையை அவரிடம் கொடுத்தான். பொருளைப் பெற்றுக்கொண்ட எஜமானர் அடிமையின் உழைப்பை மெச்சினார்; அவன் அன்று முதல் அடிமையாய் இருக்க வேண்டியதில்லை என்று கட்டளை இட்டார்; அவன் தன் பிரியம்போல் எங்கும் போகலாம் என்றும் அநுமதிதந்தார்.

உடனே அடிமை தன் தலைவரை வணங்கி, 'ஐயா ! என்னை விடுவதற்குப் பதிலாக என் தமயனை விடுதலை செய்யுங்கள். நான் இப்பொருளைப் பாடுபட்டுத் தேடியதெல்லாம் என் அண்ணனுடைய விடுதலைக்காகவே' என்று கூறினான். அடிமையின் மொழிகள் பிரபுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கின. அத் தனவான் அடிமையை நோக்கி 'நீ பாடுபட்டுத் தேடிய பணத்தைக்கொண்டு உன்னை விடுவித்துக் கொள்ளாமல், ஏன் உன் தமயனை விடுவிக்க வேண்டுகிறாய்? உனக்கு விடுதலை யடைய விருப்ப மில்லையா?' என்று வினவினார்.

அதற்கு அந்த அடிமை 'ஐயனே ! என் தமயன் என்னைப்போல் பலசாலியுமல்ல; புத்திசாலியு மல்ல. அவரால் அதிகமாக வேலை செய்ய முடியாது. இப்போது நான் அவரை விடுவிக்காவிட்டால் அவர் தம் ஆயுள் முழுதும் அடிமையாகவே இருக்க நேரிடும். அவ்வாறு நேராமல் இருக்கவே அவரை முதலில் விடுவிக்க விரும்புகிறேன். எனக்கும் விடுதலை அடைய விருப்பமுண்டு.

ஆயினும் உடன் பிறந்தவர் அடிமையாய் வருந்தும்போது நான் மட்டும் எப்படிச் சந்தோஷமாய் விடுதலை அடைவது?' தயவு செய்து என் தமயனை விடுதலை செய்யுங்கள். நான் இன்னும் சிறிது காலம் அடிமையாகவே இருந்து உழைத்துப் பணம் சம்பாதித்து என்னை விடுவித்துக் கொள்ளுகிறேன்' என்று வணக்கமாகப் பதில் உரைத்தான்.

அப் பதிலைக் கேட்ட தலைவர் அடிமையின் சகோதர வாஞ்சையைக் கண்டு வியந்தார்; தன் அண்ணனுக்காகத் தான் அடிமையாய் இருந்து கஷ்டப்படத் துணிந்த அடிமையின் தன்னலமற்ற செயலைப் பாராட்டினார்; தம்மிட மளித்த பணத்தையும் கொடுத்து அவ்விருவரையும் அப்போதே விடுதலை செய்தார்.

விடுதலை அடைந்த சகோதரர் இருவரும் நெடுநாள் வரையில் இனிது வாழ்ந்திருந்தனர்.

'உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்.'

---

3. பச்சையப்ப முதலியார்

சென்னை மாகாணத்தில் முதன் முதல் கல்விக்காகப் பெரும் தருமம் செய்தவர் பச்சையப்ப முதலியாரே யாவர். பச்சையப்ப முதலியாருடைய பணம் கல்வித் தருமத்திற்காக லட்சக் கணக்காய்ப் பயன்பட்டு வருகிறது. இவரது பெயரால் சென்னை, காஞ்சிபுரம், சிதம்பரம் முதலிய நகரங்களில் கலாசாலைகள் நடத்தப்படுகின்றன; தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இடங்களில் அன்ன சத்திரங்கள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய தருமங்களைச் செய்த பெரியார் பச்சையப்ப முதலியாரது சரிதத்தை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?

சென்னைக்கு வடமேற்கே பெரிய பாளையம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே 1754-ஆம் வருஷம் ஒரு சாதாரண குடும்பத்தில் பச்சையப்பர் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் விசுவநாத முதலியார்; தாயின் பெயர் பூச்சியம்மாள். பச்சையப்ப முதலியார் பிறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்பே இவரது தகப்பனார் காஞ்சிபுரத்தில் காலமானார். பிறகு இவரது தாயார் தம் இரண்டு பெண்களையும் அழைத்துக்கொண்டு இருந்த பொருள்களோடு பெரியபாளையம் வந்து சேர்ந்தார். அங்கே ரெட்டி ராயர் என்ற ஒரு தனவான் இருந்தார். அவர் விசுவநாத முதலியாருக்கு வேண்டியவர். அவருடைய ஆதரவில் பூச்சியம்மாள் தம் மக்களோடு வாழ்ந்து வந்தார்.

பச்சையப்பருக்கு ஐந்து வயதாயிற்று. அப்போது ரெட்டிராயரும் இறந்துபோனார். பிறகு பூச்சியம்மாள் தம் குழந்தைகளை அழைத்துக்கொண்டு சென்னையை அடைந்தார். சென்னையில் அதுசமயம் போனி நாராயண பிள்ளை என்ற ஒரு பெரிய மனிதர்

இருந்தார். அவர் நல்ல குணமும், பிறருக்கு நன்மை செய்வதில் நாட்டமு முடையவர். அவர் பூச்சியம்மாளின் ஆதரவில்லாத நிலைமையைக் கண்டு உதவி செய்ய முன்வந்தார்; அந்த அம்மாள் காப்பற்றி வைத்திருந்த கொஞ்ச திரவியத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்தார் ; பச்சையப்பருக்கும் கல்வி புகட்டி வந்தார்.

நாளடைவில் பச்சையப்பர் கல்வி அறிவும் நல்லொழுக்கமும் ஊக்கமும் உடையவராய் விளங்கினர். முதலில் இவர் பீங்கான் கடைக்காரர்களுக்கும் ஐரோப்பியருக்கும் இடையில் தரகராய் இருந்தார். தரகுத் தொழிலால் இவருக்கு நல்ல வருமானம் கிடைத்தது. பச்சையப்பர் பொருள்களை நியாயமான விலைக்கே கேட்பார். அநியாயமான விலைக்கு எப்பொருளையும் வாங்க இவர் மனம் இடம் தராது. ஆதலால் இவரை வர்த்தகர்கள் மிகவும் நேசித்தார்கள்.

பிறகு போனி நாராயண பிள்ளை பச்சையப்பரது புத்திக் கூர்மையைக் கண்டு மெச்சி இவரைத் தெற்கே சென்ற நிக்கில்ஸ் என்ற

துரைக்குத் துவிபாஷியாக அனுப்பினர். அக் காலத்தில் ஐரோப்பியரால் நம் நாட்டில் தாங்களாக எதுவும் செய்ய முடியாது. எந்தக் காரியமும் நடுவில் ஒரு இந்தியர் மூலமாகவே நடக்கும். அவ்வாறு நடுவில் இருப்பவருக்குத் துவிபாஷி என்று பெயர். துவிபாஷி என்றால் இரண்டு பாஷை பேசுகிறவன் என்று பொருள். நிக்கில்ஸ் துரையோடு சென்ற பச்சையப்பர் நிறையப் பொருள் சம்பாதித்துக்கொண்டு சென்னையைச் சேர்ந்தார்.

உடனே பச்சையப்பருக்கும் அவரது தமக்கையின் மகளுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது. அக் காலத்தில் அரசாங்கத்தார் தமக்குச் சேரவேண்டிய நில வரிக்காகக் கிராமம் கிராமமாய் ஏலம் போடுவார்கள். அவற்றைப் பணக்காரர்கள் மொத்தமாக ஏலமெடுத்துப் பிறகு குடிகளிடமிருந்து வரி வசூல் செய்வார்கள். அதனால் அதிக இலாபம் கிடைக்கும். பின்னர் பச்சையப்ப முதலியார் சர்க்காரிடமிருந்து செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பல கிராமங்களின் நெல் மேல்வாரக் குத்தகையை ஒப்புக்கொண்டார்.

அதில் முதலியார் உண்மையாகப் பாடுபட்டுச் சர்க்காருக்குக் கட்டவேண்டிய தொகையைச் செலுத்திய பின்னும் அவருக்கு அதிக இலாபம் கிடைத்தது. பிறகு பச்சையப்ப முதலியார் பலபேரிடமும் கடன் கொடுக்கல், வாங்கல், நாணய மாற்றுதல் முதலியன செய்து மிகுந்த இலாபம் அடைந்தார்.

அப்போது தஞ்சாவூரை மகாராஷ்டி மன்னரான அமரசிங்கு மகாராஜா ஆண்டு வந்தார். அவர் கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்குக் கடன் கொடுக்கவேண்டி யிருந்தது. கம்பெனி கவர்னர் அந்தக் கடனை வசூல் செய்யப் பச்சையப்ப முதலியாரை வேறொரு ஐரோப்பியரோடு அனுப்பினார். முதலியார் தஞ்சாவூர் சென்று கம்பெனிக்குச் சேர வேண்டிய தொகையை வசூல்செய்து அனுப்பினார்; அங்கேயே இரண்டு மூன்று வருடம் இருந்து தாமே லேவாதேவி செய்து வந்தார்.

இவ்வாறு பச்சையப்ப முதலியார் இளமையி லிருந்தே பல வழிகளிலும் பாடு பட்டுப் பெரும்பொருள் தேடினார். சிறந்த

குணமும் பெரும் பொருளும் படைத்த முதலியாருக்கு ஒரு குழந்தை இல்லாக் குறையே பெருங் கவலையாக இருந்தது; அதற்காக மனம் வருந்தித் தம் மனைவியாரோடு பலபுண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போனார்; அங்கங்கே பல சத்திரங்களைக் கட்டிவைத்தார்; தானதருமங்கள் செய்தார். என்ன செய்தும் யாது பயன்? முதலியாரின் ஆசைக்கு ஒரு பிள்ளை பிறக்காமல் போயிற்று. கடைசியில் பச்சையப்ப முதலியார் தமது சொத்தை எல்லாம் தருமங்களுக்காகச் செலவுசெய்ய எழுதி வைத்தார்; நாற்பதாவது வயதில் தஞ்சாவூரை அடுத்த திருவையாற்றில் காலமானார்.

பச்சையப்ப முதலியார் சிறந்த பக்தர்; அன்பும், அடக்கமும், பரோபகார சிந்தையும் வாய்ந்தவர். முதலியார் தாம் இறக்கும்வரையில் தம்மைப் பெற்ற தாயின் அன்பையும், ஆதரித்த நாராயண பிள்ளையின் நன்றியையும் மறக்கவே இல்லை; அவர்களிடம் அதிக அன்புடனும் மரியாதையுடனும் நடந்து வந்தார். பெரியார் பச்சையப்பர் ஏழைகள்

இடமும் மரியாதையாகப் பேசுவார்; தீங்கு செய்தவர்க்கும் நன்மை புரிவார். இவரிடம் பொறாமை, பிறர் சொத்தில் ஆசை, பிறருக்குத் துன்பம் செய்தல் முதலிய பேய்க் குணங்கள் இருந்ததில்லை. இவருக்குச் சங்கீதமும், பிரசங்கமும் கேட்பதில் விருப்பம் அதிகமாக இருந்தது. இவர் வந்தவர்களுக் கெல்லாம் உணவும், உடையும் உதவி உள்ளங் களிப்பார். இவர் தருமம் செய்யாத கோயில்களே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லலாம்.

இத்தகைய சிறந்த குணங்களால் பச்சையப்ப முதலியார் இறந்து பல வருடங்களாகியும் இன்றும் அவரது புகழ் நின்று நிலவுகின்றது. இனி என்றும் அவரது கீர்த்தி நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை. பிள்ளைகளே! உண்மையிலும் ஊக்கத்திலும் உழைப்பிலும் உதவியிலும் பச்சையப்பரைப் பின்பற்றி உயர்வடையுங்கள்.

'அறஞ்செய விரும்பு.'

4. அறிவு ஆக்கந்தரும்

திருக்கோவலூருக்கும் தியாகதுர்க்கத்திற்கும் இருபது மைல்கள் தூரம் இருக்கும். ரிஷிபந்தம் என்னும் ஊரிலிருந்து தியாகதுர்க்கம் போகுமட்டும் அதாவது பன்னிரண்டு மைல்களுக்கு இடையில் ஒரு வீடாவது கிடையாது. இருபுறமும் மலைகள் அதிகம். திருடர் பயம் உண்டு. திருக்கோவலூர்ச் சந்தைக்கு வியாபாரிகள் இரட்டை மாட்டு வண்டிகளில் தங்கள் சரக்குகளை ஏற்றிக்கொண்டு போய் விற்று வருவது வழக்கம். ஆனால் வர்த்தகர்கள் தங்கள் வண்டிகளைச் சரங்கோத்தாற்போல் நூற்றுக் கணக்காக ஓட்டிக்கொண்டு போவார்கள்.

ஒரு நாள் சரவணஞ் செட்டி என்னும் வியாபாரி தன் சரக்குகளை விற்றுவிட்டுத் தியாகதுர்க்கத்திற்குத் தனியாகத் திரும்பினான். அப்போது வீரபுத்திரன் என்ற ஒருவன் செட்டியிடம் வந்து தன்னையும் அவன் வண்டியில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டான்; முக்கால் ரூபாய்

தருவதாகக் கூறினான். வர்த்தகன் அதற்கு இசைந்து வீரபுத்திரனை வண்டியில் ஏற்றிக் கொண்டான்.

வழியில் திருடர் பயம் உண்டு என்பது சரவணஞ் செட்டிக்குத் தெரியும். ஆதலால் அவன் தன்னிடமிருந்த ரூபாய் ஐம்பதையும் எண்ணி ஒரு முடிப்பாகக் கட்டினான்; வண்டியில் கிடந்த வைக்கோலுக்குள் மறைத்து வைத்தான்; அதன்மீது உட்கார்ந்து வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். செட்டி செய்தவற்றை வீரபுத்திரன் கவனித்துக் கொண்டிருந்தான்.

வண்டி ரிஷிபந்தம் தாண்டி நான்கு மைல்கள் கடந்து விட்டது. அதுசமயம் ஒரு சிறு கல் பொத்தென்று வண்டிமீது விழுந்தது. உடனே சரவணஞ் செட்டியும் வீரபுத்திரனும் பயந்து நடுங்கினர். வண்டியின் வேகமும் குறைந்தது.

'யார்டா வண்டியிலே! கொண்டாடா உம் பணத்தே' என்னும் சத்தம் கேட்டது. நடுங்கினான் வீரபுத்திரன்!

செட்டி:—'ஏண்ணெ! நான்தா - சந்தைக்குப் போவுலீயெ. ரிஷிபந்தத்துக்கு-சொந்த சவாரில்லெ- பொயிட்டு வருறே' என்றான். அந்தச் சமயத்தில் வண்டிக்குள் இருந்த வீரபுத்திரன் இருமினான்.

கள்ளன்:—'அடே! இன்ன ஒருத்தெ இருக்காண்டா உள்ளெ. அவனைப் பாருங்கடா!' என்றான். மற்றொரு திருடன் வீரபுத்திரனைச் சோதிக்க முயன்றபோது இரகசியமாக அவனிடம் வீரபுத்திரன் ஏதோ கூறினான்.

உடனே திருடர் வீரபுத்திரனை விட்டு விட்டு வண்டிக்கு முன்புறம் போய், செட்டி

யின் கையைப் பிடித்து அப்பால் இழுத்து விட்டு வைக்கோலுக்குள் புதைந் திருந்த பணமுடிப்பை எடுத்துக்கொண்டு செட்டியின் கன்னத்தில் ஓர் அறை கொடுத்துப் போய் விட்டனர்.

செட்டி கள்ளரிடம் தன்னைக் காட்டிக் கொடுத்ததற்காக வீரபுத்திரனைக் கோபித்து அவனை வண்டியிலிருந்து இறக்கிவிட்டான்; வழி நெடுக அவனை வைதுகொண்டு வந் தான்; தியாகதுர்க்கத்தில் போலீஸாரிடம் அவனை ஒப்புவிப்பதாகவும் பயமுறுத்தினான்.

வண்டி தியாகதுர்க்கம் வந்து சேர்ந்தது. வந்துகொண்டிருந்த வீரபுத்திரன் மாயமாய் மறைந்து விட்டான். சரவணஞ் செட்டி போலீஸாரிடம் தனக்கு நேர்ந்த கஷ்டத் தைக் கூறி வருந்தினான்.

சில நாட்களாயின. 'சரவணஞ் செட்டியார்!' எனக் கூவிக்கொண்டே செட் டிக் கடையுள் தபாற்காரன் நுழைந்தான்; 'இன்ச்யூரன்ஸ்' கையெழுத்துப் போடும்' என்று சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்

தான். செட்டி வியப்போடு கையொப்ப மிட்டான். தபாற்காரன் ஒரு கவரைச் செட்டியிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

செட்டி அக் கடிதத்தை உடைத்துப் பார்த்தான். அதில் ஐந்நூறு ரூபா நோட்டு கள் இருந்தன. அவனுக்கு அளவிட முடி யாத ஆச்சரியமும் ஆனந்தமு முண்டாயின. அவற்றை யார் அனுப்பியது? அத்துடன் ஒரு கடிதமும் இருந்தது. அதில் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தது :

கா. வீரபுத்திர வாண்டையார், கள்ளக்குறிச்சி,
மிராசுதார், 27–3–'17

மகா-ௗ-ௗ-ஸ்ரீ சரவணஞ் செட்டியார் அவர்களுக்கு நமஸ்காரம்.

என் உயிரைக் காப்பாற்றிய தங்களுக்கு யான் செய்யத் தக்க நன்றி எதுவு மில்லை. இத்துடன் ஐந்நூறு ரூபா நோட்டுகள் அனுப்பி யிருக்கிறேன். தயவு செய்து பெற்றுக்கொள்ளவும்.

மூன்று தினங்களுக்கு முன்பு தங்களைத் திருடர்கள் வசம் காட்டிக் கொடுத்ததற்காக என்னை மன்னிக்கவும். அச்சமயம் என்னிடம்

ஆயிரம் ரூபா நோட்டுகள் இருபது இருந்தன. கள்ளர்கள் என்னைச் சோதித்து இருப்பார்களானால் அப் பெருந்தொகையை நான் இழந்துபோக நேரிடும். ஆகவே, தங்கள் ரூபா ஐம்பதை மட்டும் கவர்ந்துகொண்டு போகட்டும் என்று, என்னைப் பரிசோதிக்க வந்த கள்ளனிடம் ‘ நான் அக்கரைச் சீமைக்குப்போன கூலி; காய்ச்சலில் அடிபட்டுத் திரும்பிவிட்டேன். என்னிடம் ஒரு காசும் கிடையாது. செட்டியார் தமக்குக் கீழே வைக்கோலில் பணமுடிப்பை ஒளித்து வைத்திருக்கிறார் ’ என்று சொன்னேன். உடனே அவன் தங்கள் பணமுடிப்பை எடுத்துக் கொண்டு போய்விட்டான். என்னால் தாங்கள் பட்ட துன்பத்திற்காக நான் மிக வருந்துகின்றேன். மன்னிக்கவும். சமயம் நேரும் போது தங்களை நேரில் சந்திப்பேன்.

இப்படிக்கு,

தங்கள் அன்புள்ள,

வீரபுத்திரன்.

சரவணஞ் செட்டி இந்த ஐந்நூறு ரூபாவைக் கொண்டு வர்த்தகம் செய்து அதிக

சொத்து சேர்த்தான்; மூன்று வருஷங்களில் 'முதலாளி' என்னும் சிறப்புப் பெயரும் பெற்றான்.

---

5. உயிர் துறந்த தியாகி

சில வருஷங்களுக்கு முன் பெல்ஜியம் தேசத்தில் ஒரு கலாசாலையில் இரு சகோதரர்கள் கல்வி பயின்று வந்தார்கள். அவர்கள் இருவரும் பாதிரிமார்களாக வேண்டுமென்று விரும்பினார்கள்.

மூத்த சகோதரருக்குத் தெற்கேயுள்ள சில தீவுகளுக்கு மதப் பிரசாரகராகச் செல்ல உத்தரவு கிடைத்தது. அவர் தமது பிரயாண தினத்தை ஆசையோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் அந்தச் சமயத்தில் அவர் தெய்வ வசத்தால் நோயில் வீழ்ந்தார்; அதனால் தம் பிரயாணம் தடைப்பட்டது கண்டு மிகவும் வருந்தினார்.

அப்போது இளையசகோதரரான ஜோசப் அவருடைய படுக்கையருகே சென்று 'தங்களுக்குப் பதிலாக நான் போகிறேன்.

அது உங்களுக்கு ஆறுதலை அளிக்குமா?" என்று வினவினர். அம் மொழியைக் கேட்ட நோயால் வாடும் மூத்த சகோதரர் முகம் மலர்ந்தார்; தன் தம்பியை அருகே அழைத்துக் கட்டி முத்தமிட்டார்.

உடனே ஜோசப் 'தம் தமயனுக்குப் பதிலாகத் தாம் வரலாமா' என்று எழுதிக் கேட்டார். அவருடைய வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டது. ஜோசப் ஆனந்தக் கூத்தாடினர். அவர் ஏன் தமது தாய் நாட்டையும், வீட்டையும் விட்டு, வெகு தூரத்திலுள்ள நாகரிக மற்ற காட்டு மக்கள் வசிக்கும் தீவுகளுக்குச் செல்ல விரும்ப வேண்டும்? ஏனெனில், அவர் தமது சொந்த தேசத்திலிருந்து தாய் தந்தையர் உறவினர் முதலியவர்களோடு வாழ்ந்து இன்ப மடைவதை விட, ஆதரிப்பாரற்று அவதிப்படும் எளிய ஜனங்களிடையே சென்று தம்மாலான தொண்டு புரிந்து, துன்ப மடையவும் தயாராக இருந்தார்; அதுவே தமது கர்த்தராகிய ஏசு நாதர் காட்டிய சிறந்த வழி என்றும் நினைத்தார்.

எனவே, நமது தியாக வீரர், ஜோசப் மட்டில்லா மகிழ்ச்சியோடு புறப்பட்டுக் குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்தார்; அங்குச் சில ஆண்டுகள் தங்கிக் காட்டு மனிதர்களோடு கலந்து, கர்த்தரின் பெருமையையும், அவர் அருளிய அமுத மொழிகளையும் எடுத்துரைத்து அவர்களைச் சீர்படுத்தினர். ஜோசபினுடைய சிறந்த சேவையால் அவருக்கு 'டேமியன் பெரியார்' எனப் பெயரளிக்கப்பட்டது.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் பெரிய பிஷப், மேலோகை என்ற இடத்தில் குஷ்ட ரோகிகள் கஷ்டப்படுகிறார்களென்றும், அவர்களுக்கு உதவி செய்ய ஒருவரும் முன் வரவில்லையென்றும் வருந்திய செய்தியை நமது டேமியன் பெரியார் கேள்வியுற்றார். மேலோகை சென்றவர்கள் திரும்பி வருவதில்லையென்றும், குஷ்டரோகிகளோடு வசிப்பதனால் போனவர்களும் நிச்சயமாகக் குஷ்டரோகிகளாவார்களென்றும் நமது பெரியாருக்குத் தெரியும்.

குஷ்டரோகமென்பது மிகக் கொடிய

வியாதியென நீங்கள் அறிந்திருக்கலாம். அதைப்பற்றி விவரித்துச் சொல்வதே அதிக பயங்கரமான செய்கையாகும். அத்தொத்து நோய் பிடித்தவர்களையும், அவர்களை நெருங்குவோரையும் தனக்கு அடிமையாக்கிக் கொல்லாமல் கொல்லும்.

இக் கொள்ளை நோயின் கொடுமைகளனைத்தையும் டேமியன் பெரியார் உணர்ந்திருந்தும், மேலோகை சென்று அநாதைகளாகிய குஷ்டரோகிகளுக்குத் தொண்டு செய்யத் தீர்மானித்தார்; தமது முடிவைப் பெரிய பிஷப்புக்குத் தெரிவித்தார். தம் உயிரையும் துரும்பாக நினைத்து நமது பெரியாரெழுதிய விண்ணப்பத்திற்கு, பிஷப் உளம் களித்து அன்போடு அநுமதி அளித்தார்.

மேலோகை சென்ற டேமியன் பெரியார் குஷ்ட நோயின் கொடுமையில் வீழ்ந்து கிடந்தவர்களைத் தமது அன்பால் தேற்றினார்; பரலோகத்திலுள்ள தங்கள் பிதாவைப் போற்றி, அவருடைய திருவடிகளை அடையும் மார்க்கத்தைச் சதா அவர்களுக்குப் போதித்து வந்தார். அவருடைய மலர்ந்த முகமும், இனிய மொழியும் பிணியின்

கொடுமையால் வாடும் ஏழை மக்களது துன்பத்தை ஆற்றின. டேமியன் பெரியார் தங்களிடம் காட்டிய பேரன்பால் நோயாளிகள் 'கடவுள் இவ்விதம் தங்களுக்கும் கருணை புரிகிறாரே' என்று தேறினார்கள்.

பதினாறு ஆண்டுகள் கழிந்தன. டேமியன் பெரியார் மேலோகையில் ஓர் ஆலயம் கட்டுவித்தார்; வசிப்பதற்கேற்ற விடுதிகளும், குடிப்பதற் கொத்த சுத்த ஜலவசதிகளும் ஏற்படுத்தினார்; குஷ்டரோகிகளுடைய கொடிய புண்களுக்குத் தாமே சிகிச்சை செய்தும், சாகும் நிலைமையிலிருந்தவர்களுக்கு ஆறுதலளித்தும், இறந்தவர்களை அடக்கம் செய்தும் சேவை புரிந்து வந்தார்.

டேமியன் பெரியாருடைய அரிய ஊழியத்தைப் பல நாட்டினரும் பாராட்டினர். சிலர் பொருளுதவி செய்தனர். மற்றும் சிலர் சிகிச்சைக்கு வேண்டிய மருந்துகளைத் தந்தனர். வேறு சிலர் உதவிக்கு ஆட்களை அனுப்பினர்.

ஒரு நாள் கொதித்த நீரில் சிறிதளவு நமது பெரியாரின் காலில் தவறிப்பட்டது.

ஆனால் அவருக்கு அது கொஞ்சமும் சுடவில்லை. அது கண்டு ஆச்சரிய மடைந்த அவர் அதன் காரண மறிய ஆசைப்பட்டார்; அது குஷ்டரோகத்திற்கு அறிகுறியாக இருக்கலாமோ என்று எண்ணினார்; வைத்தியரிடம் கலந்தபோது தாமும் குஷ்ட ரோகத்தால் தாக்கப்பட் டிருப்பதை அறிந் தார். அன்று தொட்டு நமது பெரியார் குஷ்டரோகிகளிடையே பிரசங்கிக்கும்போது 'சகோதரர்களே!' என்று அழைப்பதை விட்டு 'குஷ்டரோகிகளாகிய நாம்' எனப் பேசத் தொடங்கினார்.

விரைவில் குஷ்டரோகமாகிய அத் தீய நோய் பெரியாரின் உடல் முழுதும் பரவியது. அதற்காக அவர் கொஞ்சமும் சஞ்சலப்படவுமில்லை; தமது ஊழியத்தில் குறையவுமில்லை. அதற்குள் சேவையில் அவரைப் பின்பற்றப் பலர் அங்கு வந்து சேர்ந்தனர். அப்போது அவரைத் தனியாக வேறு இடத்திற்குக் கொண்டு போய்ச் சௌக்கியப்படுத்துவதாகக் கூறியும், அவர் தாம் பழகிய சகோதர நோயாளிகளைப் பிரியச் சம்மதிக்க வில்லை.

கடைசியாக, நமது தியாக மூர்த்தி படுக்கையிலேயே கிடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்போது அவரை இரண்டு கன்னிகா ஸ்திரீகளும், ஒரு பாதிரியாரும் கவனித்து வந்தார்கள். எனினும் அவர் பிழைப்பதற்கு வழியில்லை. முடிவில் பிறர் நன்மைக்காக அரும்பணி ஆற்றிய நமது டேமியன் பெரியாரின் உயரிய உடலி னின்றும், அரிய உயிர் பிரிந்து கர்த்தரின் கழலிணை சேர்ந்தது. அப் பெரியாரின் ஆன்மா சாந்தி யடைவதாக.

'மன்னுயிர்த் தொண்டே
கடவுள் தொண்டு.'



6. கடமையின் வெற்றி

முன்னொரு காலத்தில் அறிவு நாடு என்னும் பெயருள்ள ஒரு தேசம் இருந்தது. அதை ஜோதிநாதன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அந் நாட்டில் குடிமக்கள் இன்பமாக வாழ்ந்திருந்தார்கள்.

அக் காலத்தில் மோட்டார் முதலிய வாகனங்கள் இல்லை. அரசர் பெரும்பாலும் குதிரை மீதும், பல்லக்கின் மீதும்தான் ஏறிப் போவது வழக்கம்.

ஒரு நாள் ஜோதிநாதன் அரண்மனைக்கு அவனுடைய மைத்துனனாகிய இன்பபுரி மன்னன் வந்திருந்தான். அவன் பெயர் புவனசிங்கன். ஜோதிநாதன் அரண்மனையில் மருதையன், குமரையன் என்னும் இரண்டு சகோதரர் இருந்தனர். அவர்கள் வேலை பல்லக்குத் தூக்குவது. அன்றிரவு மணி எட்டு இருக்கும். ஜோதிநாதன் மருதையனை அழைத்து, 'மைத்துன ராஜாவை இப்போதே இன்பபுரியில்

கொண்டுபோய் விட்டு வரக் கூடுமா? 'எனக் கேட்டான். மருதையன் 'சமூகம் உத்தரவு' என்ருன்.

பல்லக்குப் புறப்பட்டது. மணி ஒன்பது அடித்தது. பல்லக்கு, விடியுமுன் இன்பபுரி போய்ச்சேரவேண்டும்என்பது ஜோதிநாதன்

உத்தரவு. அறிவுநாட்டிற்கும் இன்பபுரிக்கும் முப்பது மைல் தூர மிருக்கும். பாதையோ

மலைமீ துள்ளது. காடு மிகுந்தது. மிருக பயம் அதிகம். முட் செடிகள் ஏராளம். பல்லக்கு வெகு வேகமாகக் காட்டிலே சென்றது. மருதையன் முன்னும், குமரையன் பின்னும் தீவர்த்திகளை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, தோளில் பல்லக்கைச் சுமந்து கொண்டு சென்றனர்.

விடிய மூன்று மணி நேர மிருக்கலாம். இன்பபுரி இன்னும் பத்து மைல் தூரத்தி லிருக்கிறது. பல்லக்கின் வேகம் கொஞ்சமேனும் குறையவில்லை. மருதையன் காலில் ஏதோ குத்தியது. அவன் நினைவெல்லாம் விடியுமுன் இன்பபுரி போய்ச் சேருவதிலேயே பதிந் திருந்தது. ஆகவே அது இன்னது என அவன் தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை; தரையில் காலை இடரிக் கொண்டு போனான்; அது விழுந்து விடுமென நினைத்தான். ஆனால் அது அவன் பாதத்தில் ஆழப் பதிந்து இரத்தம் பெருகியது. வலி அதிகரித்தது. ஆயினும் வலியைப் பொறுத்துக்கொண்டு மருதையன் வேகமாய் ஓடினான்.

கோழி கூவிற்று. பல்லக்கு இன்பபுரி அரண்மனை வாயில் வந்து சேர்ந்தது. புவனசிங்கன் பல்லக்கைவிட் டிறங்கினன்.

புவனசிங்கன் :—அடே மருதா, இரண்டு நாட்களுக்கு இங்கே தங்கி இளைப் பாறிப் போகலாம். இங்கேயே இருங்கள்.

மருதையன் :—மகாராஜா, சமூகம் மன் னிக்கவேண்டும். நேற்று நாங்கள் புறப்படும் போது என் மனைவி பிரசவ வேதனைப் பட்டுக்கொண் டிருந்தாள். வீட்டில் ஆண் துணை வேறில்லை. நானும் என் தம்பியும் இங்கே வந்து விட்டோம். ஆகையால் இப் போதே போக உத்தரவாக வேண்டும்.

புவனசிங்கன் :— (ஆச்சரியத்தோடு) அடே மருதா! என்ன உன் கால் இரத்தமா யிருக்கிறது !

மருதையன் :—மகாராஜா! அது ஒன்று மில்லை. இப்போது வரும்போது வழியிலே ஒரு சிறு ஆணி குத்தி விட்டது. அவ்வளவு தான்.

புவனசிங்கன் :—என்னடா ! அவ்வ ளவு அலட்சியமாகச் சொல்லுகிறாய்!

நீங்கள் இங்கே தங்கி அதற்குத் தகுந்த வைத்தியம் செய்து கொண்டுதான் போக வேண்டும். இக் காயத்தோடு உன்னை நான் அனுப்ப மாட்டேன்.

குமரையன் :—மகாராஜா! சமூகத்திலே அப்படி உத்தரவாகப்படாது. வழியிலே காட்டிலே ஒரு பூண்டிருக்கிறது. அதை எடுத்துக்காயத்தில் வைத்துக் கட்டிவிட்டால் ஒரு நாளிலே முழுதும் குணமாகிவிடும். இந்த அற்ப விஷயத்திற்காக மகாராஜா கவலைப்படலாமா?

இருவரின் உறுதிப்பாட்டையும் கவனித்த புவனசிங்கன் இருவருக்கும் ஐந்து பொற்காசுகள் அளித்தான். ஆனால் அவ்விருவரும் அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு தமது அரசன் கட்டளை யிடவில்லை என்று கூறி மறுத்துவிட்டனர்.

பின்னர் புவனசிங்கன் ஓர் ஓலையில் ஏதோ எழுதி முத்திரையிட்டு மருதையன் வசம் கொடுத்து ஜோதிநாதனிடம் சேர்க்குமாறு கூறினான். அவ்விருவரும் அரண்மனையிலேயே சிறிது ஆகாரம் அருந்தி விட்டு அதி விரைவாய்ப் பயணமாயினர். அவ்

விருவரும் அறிவு நாட்டை அடைந்தவுடன் நேரே ஜோதிநாதன் அரண்மனைக்குப் போயினர். அரசன் கொலு விருந்தான். மருதையன் அரசனை வணங்கி ஓலையைக் கொடுத்தான். அரசன் அதனைப் படித்த பின்னர், மருதையனையும் குமரையனையும் தனது மெய்க்காப்பாளராக அமர்த்துமாறு மந்திரிக்கு உத்தரவிட்டான். பல்லக்குத் தூக்கிக்கொண்டிருந்த சகோதரர்கள் கடமையின் வெற்றியால் அரசனுடைய மெய்க்காப்பாளராக மாறினார்கள்.



7. சிங்கத்தின் நன்றி

வெகு காலத்திற்கு முன் வட ஆப்பிரிக்காவில் ஓர் அடிமை இருந்து வந்தான். அவனுடைய பெயர் ‘ ஆண்ட்ரகில்ஸ் ’. ஆண்ட்ரகில்ஸ தன் எஜமானனது கொடுமைகளுக்கு உட்பட்டு வெகு நாட்கள் வரை உழன்று வந்தான். அவனது மனம் தன் அடிமை வாழ்வில் வெறுப்புற்றது; தன் அடிமைத் தளையை அறுத்தெறிய விழைந்தான். ஆனால், அவன் நிலை சிறைப்பட்டவன் நிலையை ஒத்திருந்தது; தப்பியோடிட வேண்டுமென்று நினைத்தான்; ஆனால் பிடிபட்டால் உயிரை இழக்க நேருமே என அஞ்சி சில நாட்கள் கழித்தான்.

ஆண்ட்ரகில்ஸ ஒரு நாள் முழுதும் கடுமையான வேலை செய்து மாலையில் தன் விடுதியையடைந்தான். அவனுக்குப்போதிய அளவு உணவில்லை; பசியால் நலிந்தான்; பலப்பல எண்ணினான்; எப்படியாவது தப்பி யோடிவிட வேண்டுமென்று முடிவு கொண்டான். பிடிபட்டால் உயிரிழக்க நேருமென்னும் அச்சத்தையும் அவன் பொருட்படுத்த வில்லை. காரிருள் கவிந்தது. அவன்

தப்பி யோடுதற்கு இந்தக் காரிருள் தக்கதோர் சந்தர்ப்ப மளித்தது; வெளிப்பட்டான்; தன் விடுதியைச் சுற்றி வளைந்திருந்த சுவரைத் தாண்டினுன்; காவலர் கொடுங் கண்களுக்குத் தப்பவேண்டி மார்பினுல் ஊர்ந்து வெகு தூரம் சென்ருன். அவனுடைய நெஞ்சு துடித்துக்கொண்டிருந்தது; கால்கள் நடுக்கமுற்றன; சுற்றிப் பார்த்தான்; யாரும் தன்னைக் கண்டு கொள்ள வில்லை யென்று தெளிந்தான்; பெரு மூச்சு விட்டான்.

அக் காரிருளில் ஆண்ட்ரகில்ஸ் வெகு தூரம் நடந்து சென்ருன். தான் இன்ன திசை நோக்கிச் செல்லுகின்ருன் என்றும் அவன் அறியான். நடுநிசி கடந்ததும் பசிக் களையும் நடை மிகுதியினுலான சோர்வும் மேலிட்டு அவன் பெரிதும் வருந்தினுன். உறங்குதற்கோ இடமில்லை. அவன் அடுத் திருந்த மலைபடி வாரத்தை அடைந்தான். அங்கே ஒரு குகை இருந்தது. அக் குகைக் குள் சென்று கண்ணயர்ந்தான். எவ்வளவு நேரம் அவன் உறங்கினுன் என்று அவ னுக்கே தெரியாது; பயங்கரமான ஓசை கேட்டுத் திடீரெனக் கண் விழித்தான்.

குகை வாயிலில் சிங்கமொன்று இருந்தது. அதுகண்ட ஆண்ட்ரகில்ஸ் 'புலியூருக்குப் பயந்து எலியூருக்குப் போனேன், எலியூரும் புலியூராயிற்றே' என்று ஏங்கினான். அச் சிங்கம் தன் பாதத்தில் ஒன்றைத் தூக்கிக் கொண்டு, மெதுவாக வந்தது. அப் பாதத்திலிருந்து இரத்தம் சொட்டியது. ஆண்ட்ரகில்ஸ் அப் பாதத்தை உற்று நோக்கினான்; ஒரு பெரிய முள் தைத்திருப்பதைக் கண்டான், அது கொடிய மிருகம் என்பதையும் மறந்து அதனிடம் இரக்கங் கொண்டு அதன்

அருகில் சென்றான். அச் சிங்கம் தன் பாதத்தைத் தூக்கி அவனிடம் காட்டியது. ஆண்ட்ரகில்ஸ் சிங்கத்தின் பாதத்தில் ஆழப் புதைந்திருந்த முள்ளைப் பிடுங்கி எறிந்தான்;

தன் உடையி லிருந்து சிறிது துணியைக் கிழித்து, இரத்தம் வெளிவரா வண்ணம் கட்டினான். அச் சிங்கமும் தன் நோய் தீர்ந்து அவனிடம் அன்பு காட்டியது; தன் வாலை ஆட்டிக்கொண்டு அவன் காலடியில் படுத்துக்கொண்டது.

சிறிது நேரம் கழிந்தது. சிங்கம் விரைந்து வெளியே சென்று ஒரு முயலைக் கொன்று, கொண்டு வந்து அவனுக் களித்தது. அவன் அதைச் சமைத்து உண்டான். நாள்தோறும் சிங்கம் வேட்டையாடிக் கொண்டுவரும் மிருகங்களை ஆண்ட்ரகில்ஸ் சமைத்து உண்டு வனவாசம் புரிந்து வந்தான். அச் சிங்கம் அவனிடம் ஒரு நாய் போலப் பழகி வந்தது.

சிறிது காலம் சென்றது. ஒரு நாள் ஆண்ட்ரகில்ஸ் தான் வசித்த குகையைவிட்டு வெளிப்பட்டுக் கொஞ்ச தூரம் சென்றான். சேவகர் அவனைக் கண்டு, பிடித்துக்கொண்டு போய், அரசன்முன் நிறுத்தினர். எஜமானனை விட்டுத் தப்பியோடிய குற்றத்திற்காக அவனைச் சிங்கத்திற்கு இரையாக்குமாறு அரசன் உத்தர விட்டான்.

ஆண்ட்ரகில்ஸ், தன் வாழ்நாள் முடி வெய்தி விட்டதாகக் கருதினான். அந் நகரத்தில் இரும்புக் கம்பிகளால் அடைக்கப்பட்ட ஒரு மைதானம் இருந்தது. அதைச் சுற்றிலும் உயரத்தில் ஜனங்கள் உட்கார்ந்து பார்ப்பதற்குரிய இடங்கள் உண்டு. அங்கே ஒரு நாள் அவ்வூர் குடிகள் அனைவரும் வந்து கூடியிருந்தனர். அரசனும் தன் ஆசனத்தே வந்து அமர்ந்திருந்தான். சில பணியாளர் ஓர் இரும்புக் கூண்டை இழுத்துக் கொண்டு வந்து அம் மைதானத்தின் மத்தியில் நிறுத்தினர். அக் கூண்டிற்குள் இருந்ததென்ன? மூன்று நாட்களாகப் பட்டினி போடப்பட்ட சிங்கம். ஆண்ட்ரகில்ஸூம் அங்குக் கொண்டுவரப்பட்டான். உடனே ஏவலாளர் அக் கூண்டிற்குள் இருந்த சிங்கத்தைத் திறந்து விட்டு மைதானத்தை மூடினர். அப்போது ஆண்ட்ரகில்ஸின் மனம் என்ன பாடு பட்டிருக்கும்! அவன் நடுங்கினான். கொடும் பசிகொண்ட சிங்கமும் கோரமாகப் பாய்ந்தோடி வந்தது.

ஆனால், அவனை அணுகியவுடன் அது தன் வாலை ஆட்டிக்கொண்டு ஒரு நாய்க் குட்டி



யைப் போல் நின்றது. அவன் ஆச்சரிய முற்று உற்று நோக்கினான்; குகையில் தன்னுடன் வசித்து வந்த சிங்கமெனக் கண்டுகொண்டு, மகிழ்ச்சியோடு அதன் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

அதுகண்ட அரசனும் ஏனையோரும் ஆச்சரிய மடைந்தனர். ஆண்ட்ரகில்லஸால் பின்னர் விவரமுணர்ந்த அரசன் அவனை மன்னித்து, அடிமைத் தளையை நீக்கி சுயேச்சை பெறச் செய்தான்; அன்றியும் அச் சிங்கத்தையும் அவனே வளர்த்து வர வேண்டுமென்று பணித்தான்.

'நன்றி மறப்பது நன்றன்று.'

8. சமிக்ஞை சாஸ்திரி

ஓர் ஊரில் முருகன் என்பவன் வசித்து வந்தான். அவன் எந்த விஷயத்தையும் ஆழ்ந்து ஆலோசிக்கும் குணமுடையவன்.

ஒரு நாள் அவன் இராஜ சபைக்குச் சென்றான். அங்கு அவன் அரசனை நோக்கி 'மன்ன! வெவ்வேறு பாஷைகளைப் பேசுகிறவர்கள், தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பிற பாஷை பேசுகிறவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுமாறு, சமிக்ஞை சாஸ்திரத்தை அனைவரும் படித்தறிய ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று யோசனை கூறினான்.

அரசன் அவனுக்குச் சமாதானமாகத் தன் தலைநகரின் வட பாகத்திலுள்ள ஒரு பாடசாலையில் சமிக்ஞை சாஸ்திரி ஒருவர் இருப்பதாக உரைத்தான். அது கேட்ட முருகன் அந்த சமிக்ஞை சாஸ்திரியைத் தான் காண விரும்புவதாக அரசனிடம் அறிவித்துவிட்டு, அப் பள்ளிக் கூடத்திற்குப் போகப் புறப்பட்டான்.

அரசன் தன் வார்த்தை பொய்யாகக்

கூடாதெனக் கருதினுன். அதனுல் அவன் ஒரு சேவகனைத் தான் முருகனிடம் குறிப்பிட்ட பாடசாலைக்கு அனுப்பி, தன் மொழியை எப்படியாவது உண்மையாக்குமாறு பாடசாலைத் தலைமை உபாத்தியாயருக்கு உத்தரவிட்டான்.

முருகன், மன்னன் அறிவித்த பள்ளிக் கூடம் போய்ச் சேர்ந்தான். தலைமை ஆசிரியர் அன்புடன் முருகனை வரவேற்ருர்; 'சமிக்ஞை சாஸ்திரி நேற்றைய தினந்தான் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போயிருக்கிருர்' எனக் கூறி ஏமாற்றி விடலாமென்று நினைத்தார். ஆனுல் திரும்பி வரும் வரையில் காத்திருந்தாவது அவரைத் தான் கண்டு போக வேண்டுமென்று முருகன் கூறினுன்.

தலைமை ஆசிரியர் ஏமாற்றமடைந்தார். அவருக்கு மற்ருெரு யுக்தி தோன்றியது. அவ்வூரில் குரும்பன் என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு வேஷம் போட்டுக் கொள்ளுவதில் அதிக ஆசை. அவன் சிறிதும் கல்வி வாசனை இல்லாதவன். அவனுக்கு ஒரு கண் குருடு. தலைமை

ஆசிரியர் குரும்பனுக்கு நல்ல உடுப்புக்களைப் போட்டு, பாடசாலையில் ஓர் உயர்ந்த நாற் காலியில் உட்கார வைத்தார்; அவன் வாய் திறக்காமல் சமிக்ஞை மட்டும் செய்ய வேண்டு மென்று சொல்லிக் கொடுத்தார்; பிறகு முருகனை அழைத்துப் போய் சமிக்ஞை சாஸ்திரி இவர்தான் என்று குரும்பன் முன் விட்டார்; தானும் வெகு பயபக்தியோடு கை கட்டி, வாய்பொத்தி குரும்பன் முன் நின்றார்.

முருகன, குரும்பனைப் பார்த்துத் தன் வலது கைச் சுட்டு விரலை நீட்டினன். குரும்பன் இரண்டு விரல்களைக் காட்டினன். மீண்டும் முருகன் மூன்று விரல்களைக் காட் டவே, குரும்பன் தன் விரல்களை மடக்கிக் கொண்டு குத்தும் பாவனையாகக் காட்டினன். உடனே முருகன், குரும்பனை வணங்கிவிட்டு அந்த மண்டபத்தி லிருந்து வெளியேறி னன். அதுவரையில் உபாத்தியாயர் குரும்ப னது குட்டு எங்கு வெளியாகி விடுமோ என ஏங்கி இருந்தார்.

முருகன் வெளியேறியவுடனே ஆசி ரியர் அவனைச் சந்தித்தார். அப்போது ‘ இந்தச் சமிக்ஞை சாஸ்திரி மிகக் கெட்டிக்

காரர். சிவன் ஒருவர்தாம் கடவுள் என்னும் பொருளோடு நான் ஒரு விரலைக் காட்டினேன். ஆனால், சிவத்துடன் சக்தியும் சேர்ந்திருப்பதைத் தெரிவிக்க அவர் இரண்டு விரல்களைக் காட்டினர். நான், சிவன், பிரமா, விஷ்ணு இம் மூவரையும் குறிக்க வேண்டி மூன்று விரல்களைக் காட்டினேன். அம் மூவரும் ஒன்றுதான் என்பதை அறிவிப்பதற்காகத் தம் விரல்களை அவர் மடக்கிக்கொண்டார். ஆகவே, இவர் சமிக்ஞை சாஸ்திரத்தில் மகா நிபுணர்' என்று முருகன் உபாத்தியாயரிடம் சொல்லி விட்டுத் தன் சொந்த ஊருக்குச் சென்றான்.

குரும்பன் வெகு கோபத்தோடு நாற்காலியை விட்டு எழுந்து வந்தான். உபாத்தியாயர் எதிர்ப்பட்டார். அவரைக் கண்ட குரும்பன் 'ஐயா உபாத்தியாயரே! என்னை அவமானப் படுத்தவா இங்கே அழைத்து வந்தீர்' என்று ஆத்திரமாகக் கேட்டான். உடனே ஆசிரியர் 'என்ன சமாசாரம்' என்று வினவினர்.

'எனக்கு ஒரு கண் தான் இருக்கிறதென்று என்னைக் கேவலப் படுத்த அவன் ஒரு

விரலைக் காட்டினான். நான், அவனுடைய இரண்டு கண்களும் என் ஒரு கண்ணுக்குச் சமம் என்பதைக் குறிக்க இரண்டு விரல்களைக் காட்டினேன். அத்தோடு நில்லாமல் அவன் எங்கள் இருவருக்கும் சேர்ந்து மூன்று கண்கள்தா னிருக்கின்றன வென்று அர்த்தமாகும்படி மூன்று விரல்களைக் காட்டினான். வந்துவிட்டது எனக்குக் கோபம். அவன் மூளையைச் சிதற அடித்து விடுவதாக என் முஷ்டியைக் காட்டினேன். அவன் பயந்துகொண்டு ஓடி விட்டான். அவன் இங்கேயே நின்றிருப்பானானால் நான் யாரென்பதை அவனுக்குத் தெரிவித்திருப் பேன்' என்று குரும்பன் கூறினான்.

உபாத்தியாயர் வயிறு வலிக்கச் சிரித்து நடந்த விவரத்தை அரசனுக்கு அறிவித் தார். விஷய முணர்ந்த மன்னன் ஆசிரிய ருக்குத் தகுந்த வெகுமதிகள் அனுப்பினான்.

இக் கதையால் தன் மனம் போலவே பிறரையும் நினைப்பது உலக வழக்காக இருக்கிற தென்பது விளங்குகின்றதல்லவா?

---

9. வெற்றிவீரன் வில்லியம்டெல்

ஐரோப்பாக் கண்டத்தில் சுவித்ஸர்லாந்து என்னும் ஒரு தேசமுண்டு. அது மலை அடர்ந்த நாடு. அந் நாட்டை ஆஸ்திரியர் கைப்பற்றிக் கொண்டனர். ஆஸ்திரிய அரசன் தன் பிரதிநிதியைக் கொண்டு அந் நாட்டை ஆண்டு வந்தான். அந்த இராஜப் பிரதிநிதியின் பெயர் ஜெஸ்லர்.

சுவித்ஸர்லாந்து வாசிக்கு சுவிஸ் என்று பெயர். இந் நாட்டார் சுய நிர்ணயமும் தன் மதிப்பும் பெரிதும் உடையவர்கள். பிற நாட்டார் தம்மை ஆள்வதுபற்றி அவர்கள் மிகவும் அவமான மடைந்தார்கள். தங்கள் நாட்டை அன்னியரிட மிருந்து மீட்க வேண்டு மென்னும் பேரவா அவர்களைப் பிடர் பிடித்து உந்தியது.

ஒரு நாள் அல்டார்ப் என்னும் நகரத்தில் சந்தை கூடியது. அது மலையடிவாரத்தி லுள்ள ஒரு நகரம். மலைமீது வசிப்பவர்கள் மலை பொருள்களை அச் சந்தைக்குக் கொண்டு வந்து விற்று, தமக்குத் தேவையான பொருள்களை வாங்கிப் போவது வழக்கம்.

அதுபோலவே மலை நாட்டான் ஒருவன் மான் தோல்களைக் கொண்டு வந்து விற்று, தனக்குத் தேவையான பொருள்களை வாங்கப் போனான். அவன் பெயர் வில்லியம் டெல். அங்கே ஒரு கோலை நாட்டி அதன் உச்சியில் ஒரு தொப்பி மாட்டப்பட் டிருந்தது. அதைக் கண்ட அம் மலை நாட்டு வேடுவன் கடுங் கோபத்துடன் முகத்தைச் சுளித்தான்.

அப்போது அவன் கையை யாரோ ஒருவன் பற்றினான். வேடன் திரும்பிப் பார்த்தான்; ஒரு போர்ச் சேவகனைக் கண்டான்.

'நான் செய்த குற்றம் யாது? ஏன் என் கையைப் பற்றினாய்?' என்று வேடனான வில்லியம் டெல் அச் சேவகனைக் கேட்டான்.

'நீ அரசனை அவமதித்தாய்; ஆகவே தண்டனைக் குள்ளாக வேண்டும்' என்று போர்ச் சேவகன் விடை யளித்தான்.

வேடன்:—நான் அரசனை எவ்விதத்தில் அவமதித்தேன்?

சேவகன்:— நீ அரசனை அவமதிக்க

வில்லையாஞல் அதோ தெரியும் தொப்பியை வணங்கு.

வேடன் :—தொப்பி யணிந்துள்ள ஒருவரை வணங்குவதுதான் பொருத்தமே யொழிய, குச்சியின் மேல் மாட்டப்பட்டிருக்கும் தொப்பியை வணங்குவதஞல் என்ன பயன் ?

உடனே ஜெஸ்லர் அங்குத் தோன்றிஞன். வில்லியம்டெல்லைச் சேவகர் சூழ்ந்து கொண்டனர். சந்தைக்கு வந்திருந்த ஜனங்கள் அதைக் கண்டு ஏராளமாகக் கூடி விட்டார்கள். வில்லியம் டெல் தன் கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு மௌனமா யிருந்தான்.

திடீரென்று அக் கூட்டத்திற் குள்ளிருந்து ஒரு சிறுவனது கூச்சல் கேட்டது. அனைவரும் அத்திசையை நோக்கினர். கூட்டத்தினரை நெருக்கிக்கொண்டு ஒரு சிறுவன் ‘ அப்பா ’, ‘ அப்பா ’, என்று கூவிக் கொண்டே வில்லியம் டெல் கரத்தைப் பற்றிஞன். அவன் கண்களில் நீர் பெருகியது. இளைஞனது பரிதாபத்தைக் கண்டு அனைவரும் இரங்கினர்.

ஜெஸ்லர் வில்லியம் டெல்லைப் பார்த்து இச்சிறுவன் 'உன் மகனோ' என வினவினான்.

டெல்:—'ஆம். என் முதல் மகன். ஜெஸ்லர் அச்சிறுவனது கையைப்பற்றியது கண்ட வில்லியம் டெல் 'தொடாதே, அவனை' எனக் கூவி எச்சரித்தான்.

ஜெஸ்லர்:—உன் மகனுக்கு நான் ஒரு தீங்கும் இழைக்கப் போவதில்லை; ஆனால் நீதான் அவனுக்குத் தீங்கிழைக்க வேண்டும்.

டெல்:—யார்? நானா? என் மகனுக்கா? ஒருபோதும் மாட்டேன்.

ஜெஸ்லர்:—மாட்டாயானால் உன்னைக் கொல்லுமுன்னே அவனை உன் கண் முன்பாகவே சித்திரவதை செய்யும்படிக் கட்டளையிடுவேன்.

வில்லியம் டெல் சிறிது ஆழ்ந்து சிந்தித்தான். ஜெஸ்லரின் கொடுமைக்கு ஆளாகத் தானும் தன் அரும்புதல்வனும் ஏககாலத்தில், சிக்கிக் கொண்டதைப் பற்றி வருந்தினான். அவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. என் செய்வான். அவன் கையில் ஆயுதம்

எதுவுமில்லை; தான் உலக வாழ்வை விட்டு நீங்குந் தருணம் அணுகி விட்டதெனக் கருதினான்; தன் மனைவி மக்களை எண்ணினான். இவை அனைத்தினும் தன் நாட்டை அன்னியர் ஆட்சியினின்றும் விடுவிக்காது மடிய நேருகின்றதே என்னும் துயரம் அவனைப் பெரிதும் வருத்தியது. டெல் தன் சக்தி யற்ற நிலைமையைக் கண்டு துக்கித்தான்.

ஜெஸ்லர் 'உன் மகனை, அதோ இருக்கும் மரத்தில் கயிற்றால் இறுகக் கட்டி, அவன் தலையில் ஓர் இலந்தைப் பழம் வைக்கப்படும். நீ இங்கிருந்து அம்பினால் அப் பழத்தை எய்து இரு பிளவாகப் பிளக்க வேண்டும். எய்த அம்பினால் உன் மகன் காயப்படுவானானால் நீ என் வாளுக்கு இரையாவாய்,' என்று உரைத்தான்.

அதுகேட்ட டெல், இருதலைக் கொள்ளி எறும்புபோல் மனம் துடித்தான்; சிறிது குறி தவறினாலும் தனது இணை இல்லா மகனை இழக்க நேருமே என்று ஏங்கினான். 'எக் காரணம் பற்றி எனக்கு இத்தகைய

கட்டளை இடுகிறீர்' என்று டெல், ஜெஸ்லரைக் கேட்டான்.

ஜெஸ்லர்:—நீ சிறந்த வில்லாளி என்று அறிகிறேன்; கப்பலோட்டுவதில் வெகு சமர்த்தனென்றும் கேள்வியுற்றிருக்கிறேன்; ஆகவே உன் திறமையைக் காண வேண்டியே இந்தச் சோதனையை அளிக்கிறேன்.

டெல்:—இக் கடுஞ் சோதனைக்கு நான் எப்படி உட்படுவேன்?

சிறுவன்:—தந்தையே! தாங்கள் ஏன் தயங்க வேண்டும்; தங்களுடைய குறி ஒரு போதும் தவருதே; நான் சிறிதும் அசையாது மரத்துடன் ஒன்றி நிற்கிறேன்; இச் சோதனைக்கிணங்கி நம் நாட்டின் நற்பெயரை நிலை நிறுத்துங்கள்; விடுதலை அல்லது மரணம்; இரண்டில் ஒன்றைச் சீக்கிரம் செய்து முடியுங்கள்.

அவ்வீர மொழிகளைக் கேட்ட, டெல் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்; அவன் துயரங்களெல்லாம் நொடிப் பொழுதில்

பறந்தன. அவனது உற்சாகத்திற்கோ அளவில்லை. அங்கே கூடி யிருந்த ஜனங்க ளனைவரும் அச் சிறுவனது தைரியத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்தனர். 'விதை யொன்று போடச் சுரை யொன்று முளைக் கும்' என்றனர் ஒரு சிலர். 'புலிக்குப் பிறந்தது பூனையாய்ப் போகுமா' என்றனர் வேறு சிலர். 'கடுகு சிறுத்தாலும் காரம் போகுமோ' என்றனர் மற்றுஞ் சிலர்.

'உமது கட்டளைப்படி எய்தால் நான் அடையும் பரி சென்ன' என்று டெல் ஜெஸ்லரைக் கேட்டான். 'நீயும் உன் மகனும் உயிர் இழக்க மாட்டீர்கள்' என்று ஜெஸ்லர் பதிலளித்தான்.

சிறிது ஆலோசித்த பிறகு டெல் அச் சோதனைக் கிசைந்தான். தன் சிறந்த வில்லோடு தயாராக இரு அம்புகளையும் எடுத்து வைத்துக்கொண்டான். சேவகர் சிறுவனை அங்கிருந்த ஒரு மரத்துடன் பிணைத்துக் கட்டினர்; அவன் தலைமீது ஒரு சிறு இலந்தைப் பழத்தை வைத்தனர். வில்லியம் டெல் நின்ற இடத்திற்கும்

அம் மரத்திற்கும் ஐம்பது அடி தூர மிருக்கும்.

எங்கும் நிசப்தம் நிலவியது. அனைவர் கண்களும் இமை கொட்டாது தந்தையையும் தனயனையும் மாறி மாறிப் பார்த்தன. டெல் வில்லெடுத்து நாண் பூட்டி அம்பைக் கரத்தெடுத்தான்.

'அஞ்ச வேண்டாம் அப்பா!' என்று சிறுவன் கூறித் தன் தந்தையை ஊக்கினான். வில்லினின்றும் அம்புவேகமாய்ப்பாய்ந்தது. இலந்தைப் பழம் இரு சம துண்டுகளாகக் கீழே வீழ்ந்தது. அம்பு மரத்திற் பாய்ந்தது.

அதுகண்ட அனைவரும் ஆரவாரித்தனர்; ஜெய கோஷம் செய்தனர்; தகப்பனையும் மகனையும் வாழ்த்தினர். டெல் விரைந்தோடித் தன் மகனைக் கட்டவிழ்த்துத் தூக்கியணைத்து முத்தமிட்டான்.

ஜெஸ்லர்ஏமாற்றமடைந்தான்; அவன் முன் இவ்விருவரையும் சேவகர் அழைத்துச் சென்றனர். 'நீ உன் உயிரையும் உன் மகனுடைய உயிரையும் காப்பாற்றிக் கொண்டாய். இத் துணைச் சிறந்த வில்லாளியான உன்னைக் கொல்ல என் மனம் இசையவில்லை. ஆகவே, நீயும் உன் குமாரனும் உயிர் பெற்றீர்கள்; முதலில் நீ இரண்டு அம்புகளை எடுத்து வைத்துக் கொண்டதன் கருத்தென்ன' என ஜெஸ்லர், டெல்லைக் கேட்டான்.

டெல்:—யான் எய்த முதல் அம்பு குறி தவறி என் மகன் மாண்டால், உடனே உம்மைக் கொல்லவே இரண்டாவது அம்பையும் தயாராக எடுத்து வைத்துக் கொண்டேன்.

ஜெஸ்லர்:—நான் வாக்குறுதி தவற மாட்டேன். நீ இங்குள்ளளவும் நான் ஆபத்தின்றி உயிர் வாழ இயலாது ; ஆகவே அடுத்த கப்பலில் உன்னைத் தூர தேசம் அனுப்பப் போகிறேன்.

துறைமுகத்தி லிருந்த கப்பலுக்கு வில்லியம் டெல்லைச் சேவகர் அழைத்துச் சென்றனர். வில்லியம் டெல் கடுமையான சோதனையை வென்றும், தன் மனைவி மக்களைக் காணப் பெறுமைக்காக ஒரு புறமும், தன் நாட்டின் விடுதலைக்காகப் போராட இயலாது கைதியானதைப் பற்றி மற்றொரு புறமும் வருந்திக் கப்பலேறிச் சென்றான்.

10. சுவித்ஸர்லாந்தின் சுதந்தர வீரன்

சிறுவர்களே! முன் பாடத்தில் வில்லியம் டெல் நாடு கடத்தப் பட்டானெனப் படித்தீர்கள். அவன் ஏறிச் சென்ற கப்பல் நடுக் கடலில் செல்லும் போது பெரும் புயல் அடித்தது. அதனால் கப்பலின் போக்கு மாறி விட்டது. மாலுமிகளுக்குத் திசை தெரியவில்லை. கப்பலிலுள்ள மக்கள் மனந் தத்தளித்தனர். வில்லியம் டெல்லை நாடு கடத்தி வரும் பொருட்டு ஜெஸ்லரும் அக் கப்பலிலேயே பிரயாணஞ் செய்துகொண்டிருந்தான்.

டெல் சிறந்த மாலுமி என்று அவன் முன்னரே அறிவான்; ஆகவே அவனைத் தன் முன் கொண்டு வருமாறு கட்டளை இட்டான். டெல்லுக்கு விலங்கிட்டு, அவனைச் சேவகர் ஜெஸ்லர் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

ஜெஸ்லர் டெல்லைப் பார்த்து, ‘ நீ இத் தருணத்தில் உன் திறமையைக் கொண்டு இக்கப்பலை நேரிய நெறியில் நடத்துவாயா,

என வினவினான். டெல்லும் அதற்கிசைந்தான்.

அவன் கைகளிலும் கால்களிலும் பூட்டப்பட்டிருந்த தளைகளைச் சேவகர் அகற்றினர். கப்பலோட்டியின் ஸ்தானத்தில் டெல் அமர்ந்தான். புயலின் கடுமையைத் தாண்டிக் கப்பல் சென்றது. அதிலிருந்த அனைவரும் தாம் சுகமாகக் கரை சேர வேண்டுமென்று கடவுளை வழிபட்டு நின்றனர்.

டெல், கப்பலைச் செலுத்தும் சக்கரத்தைக் கரத்திற் கொண்டு சிந்திக்கலானான். ஜெஸ்லரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்னும் எண்ணம் அவனிடம் உதித்தது. ஓர் உயர்ந்த பாறையினருகே கப்பலை வெகு வேகமாகச் செலுத்தினான்; தான் அப் பாறை மீது தைரியமாய்க் குதித்து விட்டான். மலை நாட்டிற் பிறந்து வளர்ந்த அவன் செங்குத்தான மலை மீது வெகு சுலபமாய் ஏறிச் சென்றான்.

ஜெஸ்லரும் அவன் சேவகரும் தன்னைப் பின் தொடர்ந்து வருவார்களானால், அவர்களைக்கொல்வதற்காகப் பாதையையடுத்த ஒரு புதரில் டெல் பதுங்கி இருந்தான். அவன் கையில், வில்லும் அம்புகளும் இருந்தன; வில்லிற்கு நாணேற்றித் தயாராக வைத்திருந்தான்.

இச் சிந்தனையிலேயே மூழ்கி யிருந்தானாகையால், எவ்வளவு நேரம் தான் அப் புதரில் பதுங்கி யிருந்தானென்பது அவனுக்கே தெரியாது. அவன் சிந்தனைக்கு ஊறு விளைந்தது. பலர் நடந்து வரும் சத்தம் அவன் காதுக்கு எட்டியது. புதரில் அதி ஜாக்கிரதையாக மறைந்து கொண்டான்; வில்லில் அம்பைத் தொடுத்து ஆயத்தமாய் வைத்திருந்தான்.

ஜெஸ்லரும் அவன் வீரர்களும் வந்துகொண் டிருந்தார்கள். ஜெஸ்லர் தன் அருகில் வந்த ஒரு வீரனை நோக்கி 'நான், வில்லியம் டெல் வசிக்கும் கிராமத்திற்குச் சென்று அவனையும் அவன் குடும்பத்தையும், உறவினரையும் கொன்று

வேரறுப்பதே என் முதல் வேலை' என்று கூறினான்.

உடனே, அதே நிமிஷத்தில் அவன் மார்பில் ஒரு கூரிய அம்பு ஊடுருவிச் சென்றது. 'செத்தேன்!' என்று கூவிக் கொண்டே ஜெஸ்லர் விழுந்திறந்தான். தம் தலைவர் திடீரென்று மாண்ட விந்தையைக் கண்ட மற்ற வீரர்கள் ஓட்ட மெடுத்தனர். வெற்றி வீரனாக வில்லியம் டெல் வெளிப்பட்டான்.

டெல் தன் நாடு திரும்பினான். முதலில் தன் மலைக் கிராமத்திற்குச் சென்றான்; மனைவியையும் மக்களையுங் கண்டான்; பேருவகை கொண்டான். எனினும் அவன் மனத்தை வருத்திய மற்றொரு விஷய முண்டு. அதுதான் அவன் நாட்டின் அடிமை நிலை. அந் நிலையினின்றும் நாட்டை மீட்ப தெங்ஙன மெனச் சில நண்பரோடு டெல் ஆலோசித்தான்; அவர்களனைவர் உதவியுங் கொண்டு வீரம் மிக்க படை யொன்றைத் திரட்டினான்; அன்னியரான ஆஸ்திரியரோடு போர்

தொடுத்தான். வீரர்களும் ஊக்கங் குன்ருது போராடினர். வெற்றியுற்றது யாரெனக் கூறவும் வேண்டுமோ? சுதந்தர வேட்கை மிக்க சுவிஸ் மக்களே வெற்றி யுற்றனர். சுவித்ஸர்லாந்து அடிமைத் தளை அகன்று சுதந்தரம் பெற்றது. டெல்லின் வீரமும் ஊக்கமும் தேசபக்தியும் உலக மெங்கும் பரவியது. அவனைப் போற்ருதா ரில்லை.



11. வேள்-பாரி

தமிழ் நாட்டின் ஒரு பாகம் பறம்பு நாடு எனப் பழங் காலத்தில் வழங்கியது. அந்நாட்டைச் சுமார் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாரி என்னும் சிற்றரசர் ஆண்டு வந்தார். அவரை வேள்-பாரி என்றும் அழைப்பதுண்டு. அவர் குடிகளிடம் தாயைப்போல் அன்பு செலுத்தினர்; யார் எதைக் கேட்டாலும் இல்லை என்னாது கொடுத்து வந்தார்; புலவர்களைப் பொன்னேபோல் போற்றி அவர்களுக்கு வேண்டுவன எல்லாம் வழங்கி வந்தார்.

வேள்-பாரி சிறந்த கொடை வீரராக இருந்ததோடு உயர்ந்த படைவீரராகவும் விளங்கினர். அவரது போர்த் திறத்தைப் பற்றிப் புலவர்கள் பாடியுள்ள பாடல்கள் பல உண்டு. கபிலர் என்ற புலவர் பெருமான் வேள்-பாரிக்கு உயிர்த் தோழராக இருந்தார்.

ஒரு நாள் பாரிவள்ளல் தமது அழகிய பொற் றேரில் ஏறிக்கொண்டு வேட்டை

யாடக் காட்டிற்குச் சென்றார் ; வேட்டை யாடித் திரும்பி வரும் போது ஒரு முல்லைக் கொடியைக் கண்டார். அது படர்வதற்கு ஏற்ற கொம்பு இல்லாமல் வாடி அலைந்தது. அதைப் பார்த்ததும் பாரியின் மனம் இளகிற்று ; உடனே தாம் ஏறிச் சென்ற பொற்றேரை அக் கொடியின் அருகில் நிறுத்தினார் ; அக் கொடியை அத் தேர்மீது படரச் செய்தார். பின்னர் பாரி, பாத சாரியாய் வெயிலையும் பாராது நடந்து தமது அரண்மனையை அடைந்தார். சிறுவர்களே! பாரியின் பரோபகார சிந்தையைப் பார்த்தீர்களா !

வீரத்தாலும் குணத்தாலும் பாரி நாடெங்கும் புகழ் பெற்று விளங்கினார். அது கண்ட தமிழ் நாட்டு மூவேந்தரான சேர சோழ பாண்டியர் பாரியின் மீது பொறாமை கொண்டனர். அழுக்காறு கொண்ட அம் மூன்று அரசரும் பாரியோடு போரிடப் புறப்பட்டனர் ; பாரியின் கோட்டையை முற்றுகை யிட்டனர்.

பாரியின் கோட்டைக்குள் உணவுப் பண்டங்களும் மற்றப் பொருள்களும் ஏராளமாக இருந்தன. ஆகையால் பாரியும் அவரது குடிகளும் எதிரிகளது முற்றுகையைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. ஆனால் முற்றுகை நெடு நாட்கள் நீடித்தது. கோட்டைக்குள் இருந்த பொருள்கள் எல்லாம் நாளடைவில் செல வழிந்து போயின. ஆதலால் கோட்டைக்குள் இருந்தவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

அப்போது பாரியின் நண்பரான கபிலர் ஒரு தந்திரம் செய்தார்; தான் வளர்த்து வந்த கிளிகளை நாள்தோறும் வெளியில் அனுப்பினார். அவைகள் வயல்களுக்குச் சென்று ஏராளமான நெற்கதிர்களைப் பொறுக்கிக் கொண்டு திரும்பின. அக் கிளிகள் கொண்டுவந்த தானியங்களால் கோட்டையி லிருந்தோர் காலங் கழித்தனர். அதனை அறிந்த மூவேந்தரும் பாரியை வெல்ல முடியாதென்று வெட்கித் திரும்பினர். சிறு ஜந்துக்களான கிளிகளால்

ஒரு நாட்டின் குடிமக்கள் காப்பாற்றப் பட்டனர். எனவே எவற்றையும் அற்பமாக நினைக்க இடமில்லை யன்றோ.

ஒரு சிறுமியின் பாஷாபிமானம்

அனேக ஆண்டுகளுக்கு முன்னர் லோரைன் என்ற நாட்டினருக்கும் ஜர்மன் தேசத்தார்க்கும் சண்டை யுண்டாயிற்று. அப் போரிலே ஜர்மானியர் வெற்றி யுற்றனர். எனவே லோரைன் மாகாணம் ஜர்மானியர் வசமாயிற்று.

லோரைன் மாகாணத்தைக் கைப்பற்றிய ஜர்மானியர், அந் நாடெங்கும் தங்கள் தாய் மொழியான ஜர்மன் பாஷையைப் பரவச் செய்ய எண்ணினர். உடனே லோரைன் நாட்டிலிருந்த எல்லாப்பாடசாலை களிலும் ஜர்மன் பாஷையே கற்பிக்கப்பட வேண்டுமென்று கண்டிப்பான உத்தர விடப் பட்டது. தங்கள் தாய் மொழியை விரும்பிக் கற்கும் லோரைன் நாட்டினர் தண்டனைக் குள்ளாயினர். துன்பம் சகியாத லோரைன்

நாட்டினர் உள்ளக் கொதிப்புடன் ஜர்மானியர் கட்டளைக்கு உட்பட்டு இருந்தனர். இவ்வாறு முப்பது வருடங்கள் கழிந்தன. லோரைன் மாகாணம் முழுதும் ஜர்மன் பாஷை மயமாயிற்று.

அக்கால ஜர்மனி தேசச் சக்கரவர்த்தினி மிக்க இரக்க மனம் வாய்ந்தவர். அவர் ஒரு சமயம் லோரைனில் உள்ள ஒரு பெண் பாடசாலைக்கு விஜயம் செய்ய நேர்ந்தது. அப் பாடசாலையில் இருந்த பெண்கள் அனைவரினும் ஒரு பெண், அழகிலும், அறிவிலும், குணத்திலும் மணி போல் விளங்கினாள். அப் பெண்மணியைப் பார்த்தபோது சக்கரவர்த்தினியின் மனம் அவள்மீது பாய்ந்தது. சக்கரவர்த்தினி உடனே அச் சிறுமியைத் தம்மிடம் அழைத்தார். இருவரும் பின் வருமாறு பேசினர் :

சக்கரவர்த்தினி :—பெண்ணே ! உன்னைக் கண்டவுடன் என் மனம் மகிழ்ச்சி யடைகிறது. உனக்கு என்ன வேண்டும்? சொல். தட்டாமல் தருகிறேன்.

சிறுமி:—அன்னையே! தாங்கள் என்னிடம் காட்டும் அன்பை யான் என்றும் மறவேன். தாங்கள் சொல்லுகிறபடி நான் கேட்பதைத் தங்களால் கட்டாயம் கொடுக்க முடியுமோ?

சக்கரவர்த்தினி:—நற்குணம் வாய்ந்த பெண்ணே! நான் யார் என்பதை நீ அறியாயோ? ஜர்மனி தேசத்துச் சக்கரவர்த்தினியால் கொடுக்க முடியாததும் ஒன்று இருக்க முடியுமோ? நீ எதை வேண்டினும் நான் தட்டாமல் தருகிறேன். அச்சமில்லாமல் கேள்.

சக்கரவர்த்தினிக்கும், சிறுமிக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் ஆச்சரியப் பட்டனர்; சிறுமி அரசியிடம் என்ன பரிசு கேட்பாளோ என்று அறிய அதிக ஆவலாய்க் காத்திருந்தனர்.

சிறுமி:—(அரசியை வணங்கி) தாயே! நானும் எங்கள் நாட்டிலுள்ள சிறுவர் சிறுமிகளும் பாடசாலையில் படிக்கும் பாடங்

களை எங்கள் தாய் மொழியிலேயே கற்கும் படிக் கட்டளை இட வேண்டும். இது ஒன்று தான் நான் தங்களிடம் விரும்பும் பரிசு.

சிறுமியின் விருப்பத்தை அறிந்தவுடன் அரசியார் திகைத்துப் போனார். அங்கிருந்தவர்கள் அச் சிறுமியின் நுட்ப புத்தியைக் கண்டு அவளை மெச்சிக் கொண்டாடினார்கள்.

சக்கரவர்த்தினி எவ்வாறு தாம் அளித்த வாக்குறுதியை மறுப்பார்! ஆனால், சக்கரவர்த்தியின் கட்டளையை மாற்ற அவருக்கு அதிகாரம் இல்லை. உடனே அவர் தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுமாறு தமது காதலரை வேண்டினார். சக்கரவர்த்தியும் சிறுமியின் பாஷாபிமானத்தைப் பாராட்டித் தம் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றினார்.

அன்று முதல் லோரைன் நாட்டிலிருந்த எல்லாப் பாடசாலைகளிலும் தாய் மொழியிலேயே பாடங்கள் போதிக்கப் பட்டன. ஒரு சிறுமியின் மொழிப் பற்றால் நாடு முழுமைக்குமே நன்மை ஏற்பட்டது.

தமிழ் மாணவர்களே! சிறுமியின் அரிய செயலால் நீங்கள் அறிந்து கொள்வது என்ன? அச் சிறுமியைப் போலவே நீங்களும் பாஷாபிமானம் உடையவராய்த் திகழ வேண்டாமா?

13. ஸர். தி. முத்துசாமி ஐயர்

எளிய குடும்பத்திலே பிறந்து தங்கள் முயற்சியால் முன் வந்தவர்கள் எந்த நாட்டிலும் உண்டு. நமது தமிழ் நாட்டிலே ஓர் ஏழைக் குடும்பத்திலே உதித்து உழைப்பால் உயர்வடைந்த பெரியார் ஒருவர் சமீபகாலத்தில் இருந்தார். அவரது பெயர் ஸர். தி. முத்துசாமி ஐயர் என்பதாகும்.

இந்தியாவில் தென்னாடு விசேஷமுடையது. அத் தென்னாட்டிலும் தஞ்சாவூர் ஜில்லா அதி முக்கியமானதாகும். தஞ்சா

ஊர் ஜில்லாவில் திருவாரூர் என்ற ஒரு திவ்விய ஸ்தலம் இருக்கிறது. அப் புண்ணிய க்ஷேத்திரத்திற்கு அருகில் உச்சுவாடி என்ற ஒரு கிராமம் உண்டு. அக் கிராமத்தில்தான் முத்துசாமிஐயர் 1832-ஆம் வருடம் பிறந்தார். அவர் சிறுவராய் இருந்த போதே அவரது தந்தையார் காலமானார். முத்துசாமி ஐயருக்குச் சகோதரர்களும் இருந்தார்கள்.

தந்தை இறந்த பிறகு அவர்களைப் போஷிக்க வேண்டிய பொறுப்பு அவரது தாயாருடையதாயிற்று. முத்துசாமி ஐயரின் தாயார் தம் மக்களை அழைத்துக்கொண்டு திருவாரூரை அடைந்தார். முத்துசாமி ஐயர் பன்னிரண்டு வயது வரையில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார். மேலும் கல்வி கற்க அவரால் முடியவில்லை. அவர் தமது படிப்பைவிட வயிற்றுப் பிழைப்பை முக்கியமாய்க் கவனிக்கும்படி ஏற்பட்டு விட்டது.

முத்துசாமி ஐயர் ஒரு கிராமக் கணக்கப் பிள்ளைக்கு உதவியாக மாதம் ஒன்றுக்கு ஒரு

ரூபா சம்பளத்திற்கு வேலை பார்க்கத் தொடங்கினர். சில மாதங்களுக்கெல்லாம் அவரது அன்னையார் மரண மடைந்தார். தாயின் பிரிவு முத்துசாமி ஐயருக்குத் தாங்க முடியாத துக்கத்தைத் தந்தது. பிறகு ஒருவாறு தேறி, ஐயர் தமது முன்னேற்றத்தில் கருத்தைச் செலுத்தினர்.

முத்துசாமி ஐயர் கஷ்டப்பட்டு வயிறு வளர்க்க வேண்டி இருந்தும் கல்வி கற்பதற்கான முயற்சியில் குறைய வில்லை; தரித்திரத்தால் விளக்கெண்ணெய்கூட வாங்க வகையற்று வீதி லாந்தர்களிலும், கோயில் விளக்குகளிலும் ஒதுங்கி நின்று படித்து வந்தார். இதைவிட வேறு கஷ்டம் உண்டோ? சிறுவர்களே! முத்துசாமி ஐயர் தம் வறுமை நிலைமையிலும் கல்விமீது வைத்த கருத்தைக் கவனியுங்கள்.

திருவாரூரில் முத்துசாமி நாய்க்கர் என்பவர் அது சமயம் தாசில்தாராய் இருந்தார். அவர் முத்துசாமி ஐயரின் புத்திக் கூர்மையையும் சுறுசுறுப்பையும் கண்டு மெச்சி அவரைத் தமது கச்சேரியில் ஒரு சிறு உத்தியோகத்து அமர்த்தினர்;

ஒழிந்த வேளையில் அவருக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்து வந்தார்.

இவ்வாறு இருக்கையில் திருவரூருக்கு அருகில் ஓர் ஆறு உடைப்பெடுத்துக் கொண்டது. தாசில்தார் உடைப் பெடுத்த இடத்திற்கு, நிலைமையை அறிந்து வர முத்துசாமி ஐயரை அனுப்பினார். ஐயர் அவ்விடம் சென்று விவரம் அறிந்து விரைவில் வந்து சொன்னார்; உடைப்பை அடைப்பதற்காகும் செலவுக்கும் ஒரு திட்டம் கூறினார். தாசில்தாருக்கு அவர் உரைத்தது சரியாக இருக்குமென்ற நம்பிக்கை இல்லை; அநுபவம் வாய்ந்த தமது ஆபீஸ் குமாஸ்தா ஒருவரை வினவினார். அவரும் முத்துசாமி ஐயர் கூறிய அபிப்பிராயத்தையே தெரிவித்தார். ஆதலால் தாசில் தாருக்கு ஐயர்மீ திருந்த அபிமானம் அதிகரித்தது. மற்றொரு சமயம் மிராசுதார் ஒருவர் தாசில்தாரிடம் தமது நிலங்களின் கிஸ்தி எவ்வளவு என்று கேட்டார். அப்போது அங்கிருந்த முத்துசாமி ஐயர் கணக்கைப் பார்க்காமலே சரியான தொகையைக் கூறினார்.

முத்துசாமி ஐயரின் நுண்ணறிவையும் சிறந்த குணத்தையும் கண்ட முத்துசாமி நாய்க்கருக்கு அவரை அதிகமாகப் படிக்க வைக்க வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டது: நாய்க்கர் தாம் விரும்பியவாறே ஐயரை நாகப்பட்டினம் அனுப்பி மிஷன் ஸ்கூலில் படிப்பித்தார். ஐயர் நாகையில் 18 மாத காலம் ஊக்கமாகப் படித்து வந்தார்; பிறகு நாய்க்கரின் பேருதவியால் சென்னை அரசாங்க ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார். சென்னையில் ஐயரை ஸர். ஹென்றி மாண்ட் கோமரி என்னும் பிரபுவும், பாடசாலைத் தலைவரான பௌவெல் துரையும் அன்போடு ஆதரித்து வந்தார்கள்.

ஐயர் தமக்கு இருபத்து நான்கு வயது ஆகிற வரையில் சென்னையில் கல்வி கற்றார். அப்போது ஆசிரியரும் பிறரும் அவரது கல்வித் திறத்தைக்கண்டு அவரைப் பாராட்டினர். பலபரீட்சைகளில் ஐயர் முதல் தரமாகத் தேறிப் பல பரிசுகளும் பெற்றார். சென்னைக் கல்விக் கழகத்தார் ஆங்கிலத்தில் ஒரு சிறந்த வியாசம் எழுதுகிறவருக்கு ரூபா

ஐந்நூறு பரிசு அளிக்க முன் வந்தனர். ஐயர் அவ் வியாசப் போட்டியில் கலந்து கொண்டார். பலர் எழுதிய கட்டுரைகளில் ஐயருடையதே முதல் தரமாக இருந்தது. கல்விக் கழகத்தார் ஐயரைப் பாராட்டி 'ஐந்நூறு ரூபா வெகுமானமாய்க் கொடுத்தனர். அந்த ஐந்நூறு ரூபாவையும் ஐயர் தாம் இறக்கும் வரையில் காப்பாற்றி வைத்திருந்தார்.

படிப்பு முடிந்த பிறகு ஐயர் தாம் படித்த பாடசாலையிலேயே ஆசிரியராய் அமர்ந்தார். அப்போது அவருக்கு ரூபா அறுபது சப்பளம் கிடைத்தது. பிறகு ஸர். ஹென்றி மாண்டுகோமெரியின் உதவியால் தஞ்சாவூரில் ரிக்கார்டு கீப்பராகக் கொஞ்ச காலம் இருந்தார். பின்னர் ஐயர் மீது அபிமானமுடைய ஆர்பத் நட்ளின்பவர் 150 ரூபா சம்பளத்தில் அவரைப் பாடசாலை டிப்டி இன்ஸ்பெக்டராக நியமித்தார்.

அது சமயம் அரசாங்கத்தார் வக்கீல் பரீட்சை ஒன்று நடத்தினர். முத்துசாமி

ஐயர் அப் பரீட்சைக்குப் படித்து முதன்மை யாகத் தேறினர். பிறகு ஐயருக்குத் தரங்கம் பாடியில் ஜில்லா முன்சீபு வேலை கிடைத்தது. ஐயர் தமது உத்தியோகத்தில் உண்மையாக உழைத்ததால் முறையே தஞ்சாவூரில் டிப்டி கலெக்டராகவும், தென் கனடாவில் ஸப் ஜட்ஜாகவும், சென்னையில் போலீஸ் மாஜிஸ்ட்ரேட்டாகவும் மாற்றப் பட்டார். ஐயர் தாம் வகித்திருந்த உத்தி யோகங்களி லெல்லாம் முறைப்படி நடந்து வந்தார்; வழக்குகளில் பாரபட்சமின்றி நீதி வழங்கி வந்தார்.

அவர் சென்னையில் போலீஸ் மாஜிஸ்ட் ரேட்டாக இருந்தபோது ஹைக்கோர்ட் ஜட்ஜ் ஒருவர் தம் வீட்டு எல்லைக்குள் பிரவேசித்ததற்காக ஓர் இந்தியனை அடித்து விட்டார். அந்த வழக்கு ஐயரிடம் வந்த போது அவர் எதிரி பெரிய உத்தியோகஸ்தர் என்பதையும் பாராது, அவருக்கு மூன்று ரூபா அபராதம் விதித்தார்.

அப்பால் ஐயரை அரசாங்கத்தார் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாக

நியமித்தனர். அப்போது டில்லியில் நடந்த தர்பாருக்கு ஐயரும் சென்றிருந்தார். திரும்பி வந்தவுடன் ஐயர் ஹைக்கோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். இந்தியரில் அவரே முதன் முதல் ஹைக்கோர்ட் ஜட்ஜானவர். ஐயர் பதினேழு வருடங்கள் ஹைக்கோர்ட் ஜட்ஜாக இருந்தார். உத்தியோகங்களில் அவரைப் போல் உழைத்தவரும் நல்ல பெயர் எடுத்தவரும் இல்லை.

ஐயரின் சிறந்த ஊழியத்தையும் அரிய குணத்தையும் கண்ட அரசாங்கத்தார் அவருக்கு 'ஸர்' என்ற உயரிய பட்டத்தை அளித்தனர். ஸர். தி. முத்துசாமி ஐயருக்குப் பொது நலத்தில் மிகப் பொறுப்புண்டு. அவர் அனைவரிடத்திலும் அன்பாக நடந்து கொள்வார்; ஏழை-பணக்காரன் என்ற வேற்றுமை பாராட்டுவதில்லை. அற்ப நிலையிலிருந்து உயர்ந்த பதவிக்கு வந்த போதும் அவர் அடக்கமாகவே இருந்தார். எளிய வாழ்க்கையையே அவர் எப்போதும் விரும்பினார். அவரிடமிருந்த எல்லா நற்குணங்களிலும் பொறுமையே சிறந்தது.

உழைப்பால் உயர்ந்த ஸர். தி. முத்துசாமி ஐயர் நீண்ட புகழோடு தமது 63-வது வய தில் (1895-ஆம் ஆண்டு) இம் மண் ணுலகை விட்டு மறைந்தார். சென்னை ஹைகோர்ட்டில் அவரைப்போல் வெண் சிலையில் ஓர் உருவம் அமைக்கப்பட் டிருக் கிறது.

சிறுவர்களே! உணவுக்கே கஷ்டப் பட்ட முத்துசாமி ஐயர் உயர்ந்த நிலை அடைந்து உலகம் போற்றும் ஸர். தி. முத்துசாமி ஐயரானது எப்படி? ஊக்கத் தாலும், உழைப்பாலும் அல்லவா? அவை களே உங்களுடைய முன்னேற்றத்திற்கும் உரிய கருவிகளாகும்.

'முயற்சி திருவினை யாக்கும்.'

14. பட்டினத்தடிகள்

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சோழ நாட்டின் தலை நகராக விளங்கியது காவிரிப்பூம் பட்டினம். இது குபேரன் நகரெனத் திகழ்ந்தது. இங்கே திருவெண்காடர் என்னும் வணிகர் வசித்து வந்தார். அவர் செல்வத்திலும் சிவ பக்தியிலும் சிறந்தவர்; எனினும், புத்திரப் பேறு இன்மையால் பெரிதும் வருந்தினார். அப்போது திருவிடைமருதூரில் ஒரு வில்வமரத்தினடியில் ஒரு குழந்தை இருந்தது. அக்குழந்தையைச் சிவசருமன் என்பானும் அவன் மனைவியும் கண்டனர்; அதை அவர்கள் எடுத்து வந்து பிள்ளை யில்லாத திருவெண்காடரிடம் கொடுத்துப் பொருள் பெற்றுப் போயினர்.

'குருடன் கண் பெற்ற'தைப்போல் திருவெண்காடரும் அவர் துணைவியாரும் அக் குழவியை வெகு செல்வமாக வளர்த்து வந்தனர்; மருதவாணர் எனப் பெயர் சூட்டினர்; நல்ல ஆசிரியரிடம் அனுப்பிக் கல்வி பயிலச் செய்தனர். மருதவாணரும்

கல்வியிற் கருத்தூன்றிப் படித்துத் தேர்ச்சி பெற்றார். பதினாறு ஆண்டுகள் கழிந்தன.

பின்னர் ஒரு நாள் மருதவாணர் ஒரு காதற்ற ஊசியையும், மூன்று பாடல்களையும் தன் வளர்ப்புத் தாயிடம் கொடுத்து மறைந்து விட்டார். வெளிப் போந்திருந்த திருவெண்காடர் திரும்பி வந்ததும் அவரது மனைவி மருதவாணர் தந்த மூன்று பாடல்களையும், காதற்ற ஊசியையும் அவரிடம் கொடுத்தனள். அவர் 'காதற்ற ஊசியும் வாராதுகாண் நுங் கடை வழிக்கே' என்று எழுதி யிருந்த பாட்டைப் பன்முறை படித்தார்; அவ்வூசியையும் உற்று நோக்கினார்; அதன் உட்கருத்தையும் யறிந்தார். உடனே அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று; மண் பெண் பொன் என்னும் மூவாசையையும் வெறுத்துத் துறவு கொண்டார். அன்று முதல் அனைவரும் பட்டினத்தடிகள் என அவரை அழைத்தனர். மீண்டும் இல்லறம் நடாத்துமாறு அவரை அவரது உறவினர் வேண்டினர். அவர் அதற்கு ஒப்பவில்லை. பிறகு தம் ஊரி லிருந்த ஒரு

சத்திரத்தில் தங்கிப் பிச்சை ஏற்றுண்டு வந்தார். இது கண்ட அவரது தமக்கை, 'ஐயோ! பாவியாகிய இவனால் நமது குலமும், பெருமையும் சிதைகிறதே' என எண்ணி மனம் நொந்தாள். 'இவன் இருப்பதைவிட இறப்பதே சாலவும் நன்று' என நினைத்து அவரைக்கொல்ல முயன்றாள்; ஓர் அப்பத்தினுள் விஷத்தை வைத்து அதனை உண்ணுமாறு அடிகளிடம் கொடுத்தாள். அவர் அந்தச் சூழ்ச்சியை அறிந்தார். பெரியார் அறியாததும் உளதோ? உடனே அடிகள் 'தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச்சுடும்' எனக் கூறி அந்த அப்பத்தை அவளது வீட்டுக் கூரையில் செருகினார். உடனே அவ்வீடு தீப்பற்றியெரிந்தது. அத் தீ ஊரெங்கும் பரவ ஆரம்பித்தது. உடனே நகர மக்கள் பலர் ஓடிவந்து தீயை அணைக்கும்படி அடிகளை வேண்டினர். அடிகளும் அங்ஙனமே அருளினார்.

பின்னர் அடிகள் பல ஊர்களுக்குச் சென்று திருமாகாளம் என்னும் ஊரை

அடைந்து அங்குள்ள பிள்ளையார் கோயிலில் தங்கி யிருந்தார். அன்றிரவு அவ்வூர் அரசனது அரண்மனையில் களவாடத் துணிந்த சில கள்வர்கள், அடிகள் தங்கி யிருந்த கோயிலுக்கு வந்து, அங்குப் பிள்ளையாரை வணங்கி, 'சுவாமி! நாங்கள் களவாடிப் பிடிபடாது திரும்பினுல் உமக்குச் சன்மானம் அளிக்கின்ருேம்,' என வேண்டிக் கொண்டு சென்ருர்கள். அத் திருடர்கள் அரண்மனையி லிருந்து ஏராளமான விலையுயர்ந்த பொருள்களைக் கவர்ந்து திரும்பினுர்கள்; அப்போது பிள்ளையாருக்குச் சார்த்தத் துணிந்து கோயிலினுள் விலையுயர்ந்த முத்துமாலையை எறிந்து போயினர். அம் மாலை அவ் விக்கிரகத்தினருகில் உட்கார்ந்திருந்த அடிகள் கழுத்தில் விழுந்தது. அடிகள் ஆழ்ந்த நிஷ்டையிலிருந்தபடியால் அவர் அதனை அறியவில்லை.

மறுநாட்காலையில் அரண்மனைத் திருட்டுச் செய்தி வெளிப்பட்டது. திருடர்களைத் தேடிப் பலஏவலர் புறப்பட்டனர். அவர்களுள் சிலர் பிள்ளையார் கோயிலில்

நிஷ்டையி லிருக்கும் பட்டினத்தடிகளைக் கண்டனர். அவர் கழுத்தில் முத்துமாலை விளங்கியது. எனவே அவரே திருடரெனத் தீர்மானித்தனர்; அவரைக் கண்டபடி வைது துன்புறுத்தினர்; அதனால் அவர் நிஷ்டை கலைந்து விழிப் புற்றார்; தாம் கைதியெனக் கண்டார். அவர்களுட் சிலர் 'இவர் திருடரல்லர், சிறந்த சிவபக்தர்' என்றனர். மற்றுஞ் சிலர், 'இவன் கை தேர்ந்த கள்ளன்' என்றனர். பின்னர் அவர்கள் அவரை மாலையுடன் அரசனிடம் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

அந்த அரசன் சற்றும் ஆராய்ந்து பாராது, அக் கள்வனைக் கழுவி லேற்றுங்கள் எனப் பணித்தான். ஏவலாளர் பட்டினத்தடிகளைக் கழுகு மரத்தடிக்குக் கொண்டு சென்றனர். அவர் கழுகு மரத்தடியில் நின்று பாடினார்.

உடனே அக் கழுகுமரம் தீப் பற்றி எரியத் தொடங்கிற்று. இவ் வற்புதச் செயலைக் கண்ட அரசன் திடுக்கிட்டான்; அடிகளது பெருமையை உணர்ந்தான்;

தன் புன்மதியைக் கடிந்தான்; தன் பிழையைப்பொறுத்தருளி, தன்னைமன்னிக்கு மாறு அடிகளை வேண்டிக் கொண்டான். அடிகளும் இரங்கி அவனை மன்னித்தார். பிறகு அடிகள் அவனுக்கு ஞானோப தேசமும் செய்தருளினர். அவ் வரசன் துறவு கொண்டான். அதுமுதல் அவன் பத்திர கிரியார் எனும் பெயரோடு விளங்கினன்.

சில காலம் சென்ற பின் அடிகளது அன்னையார் விண்ணுலகமெய்தினர். அச் செய்தியைத் தமது ஞானக் கண்ணால் அறிந்த அடிகள், விரைந்து சுடலைக்குச் சென்று, அன்னையின் சவத்தைத் தகனம் செய்தார். அப்போது அவர் தம் அன்னையை நினைந்து மன முருகிப் பல பாடல்களைப் பாடினர். அவற்றில் ஒன்று வருமாறு:

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து [பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கருதமுது தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

முற்றுந் துறந்த பெரியாரே அன்னை

யினது பிரிவாற்றுமைக்குப் பெரிதும் வருந்திஞரெனின், சாதாரண நிலையிலுள்ள மக்கள் தங்கள் அன்னையைப் பொன்னே போல் போற்றவேண்டுமன்றே? இதனாலல்லவா 'தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை' என ஆன்றோர் கூறியுள்ளார்.

அன்னையை இழந்த அடிகள் திருவிடை மருதூர், திருவாரூர், திருக்காஞ்சி, திருக்காளத்தி முதலிய இடங்களுக்குச் சென்று சிவபெருமானைத் துதித்து, பக்தி ரசம் பெருகும் பல பாடல்களைப் பாடியருளினர்; முடிவில் திருவொற்றியூர் அடைந்து ஆண்டவனது திருவடிகளிற் கலந்து சிவலிங்கமாக மாறினர். இன்றும் திருவொற்றியூரில் அவரது சமாதி நிலயத்தைக் காணலாம்.

'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் [பிள்ளையைப்போல்
யாருந் துறக்கை அரிது அரிது.'

—தாயுமானுர்.